Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 25 (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :109

**மொறாயஸ் ஒளிச்சுடர்**

பல் மூக்குக் கண்ணாடியகம்

இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.

(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)






கேணல் கிட்டு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்ட தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பொதுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்துவதை முதற்படத்திலும், கலைஞர் புதுவை அன்பனுக்கு பரிசு வழங்குவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

# இலங்கை அபிவிருத்தி - அரசியல் நிலைகுறித்து கலந்துரையாட வொஷிங்ரனில் விசேட கூட்டம்!

## அடுத்த மாதம் நடத்த ஆர்மிரேஜ் ஏற்பாடு

(வொஷிங்ரன்)

**இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி மற்றும் ரோக்கியோ மாநாட்டிற்கு பின்னான இலங்கையின் அபிவிருத்தி நிலை தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று, அடுத்த மாதம் 17 ஆம் திகதி வொஷிங்ரனில் நடைபெறவுள்ளது.**

**இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாட்டை அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் மேற்கொண்டுள்ளார்.**

இந்தக் கூட்டத்திற்கு ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றி நிதியுதவி வழங்கிய ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.

றிச்சட் ஆர்மிரேஜ் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டிற்கு, ஜப்பான் நாட்டின் பிரதிநிதியாக விசேடதூதுவர் யசுஷி அகாஷியும், நோர்வே நாட்டின் பிரதிநிதியாக, அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் பங்குகொள்ளவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பற்றன் தனது சார்பாக பிரதிநிதி ஒருவரையும் அனுப்புவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ரோக்கியா மாநாட்டின் பின் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக, இந்தக்கூட்டத்தில் ஆராயப்படுமெனவும் இதற்கு அந்த மாநாட்டில் கலந்துகொண்டு நிதியுதவி வழங்கிய நாடுகளே கண்டிப்பாக கலந்து கொள்ளுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இந்தக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையில் இலங்கைக்கு வழங்கவுள்ள நிதியுதவியை வழங்குவது எவ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ் 3 ஆம் ஆண்டு நிறைவு

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் மூன்றாம் ஆண்டு நிறைவு தின நிகழ்வு நேற்று யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் உணர்ச்சி பூர்வமாக கொண்டாடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் மன்றத் தலைவர் பகீரதன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

நிகழ்வில் தேசியக்கொடியினை யாழ். மாவட்ட அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரினை துணைவேந்தர் மோகனதாஸ், இமானுவேல் அடிகளார் ஆகியோரும் ஏற்றினர்.

தொடர்ந்து பொங்குதமிழ் பிரகடனம் யாழ்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை முதல் விலை உயர்வு

**பத்திரிகைத் தாள் விலை உயர்வின் மத்தியிலும் 'நமது ஈழநாடு' பத்திரிகையின் விலையை அதிகரிக்காமல் இருந்து வந்தோம்.**

**ஆனாலும், பக்கங்கள் அதிகரித்துள்ள நிலையில்- பத்திரிகையின் விலையை ஒரு ரூபாவால் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளோம்.**

**வாசகர்களாகிய நீங்கள் எமக்கு தொடர்ந்து ஆதரவு தருவீர்கள் என நம்புகிறோம்.**

**நாளை முதல் விலை ரூபா 7/-**

**- நிர்வாக இயக்குநர் -**

# கேணல் கிட்டு நினைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பிரபா பங்கேற்பு

கேணல் கிட்டு பீரங்கிப் படையணி, லெப். கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் கேணல் கிட்டு, லெப்.கேணல் குட்டிசிறி உட்பட பத்து வேங்கைகளின் 11 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் வன்னியில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மண்டபத்தில் நடைபெற்றன. இதில் தமிழீழத தேசியத் தலைவர் பிரபாகரன் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக்கொடியை தளபதி கேணல் பால்ராஜ் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் கொடியை அதன் சிறப்புத் தளபதி மணிவண்ணனும், லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியின் கொடியை அதன் சிறப்புத் தளபதி கேணல் பானுவும் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களுக்கான பொதுச்சுடரினை தேசியத் தலைவர் பிரபாகரன் ஏற்றிவைத்து மாவீரர்கள் கேணல் கிட்டு, லெப்.கேணல் குட்டிசிறி ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலையும் அணிவித்தார். ஏனைய மாவீரர்களுக்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதியின் பதவி நீடிப்பு சர்ச்சை ஐ.நாவிடம் முறையிட ஐ.தே.க. முடிவு

## சர்வதேச நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டாவது பதவிக் காலத்தில் - இரண்டாவது முறையாக, இரகசியமாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுவது குறித்தும்,

பன்னிரண்டு ஆண்டுகள் பதவியில் இருக்கவே சந்திரிகா இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுவது குறித்தும், ஐக்கிய நாடுகள் சபையிடமும், சர்வதேச நீதி மன்றத்திடமும் முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியே இந்த முறைப்பாட்டைச் சர்வதேச ரீதியில் எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயம், மீன்பிடி உட்பட

# 4 அமைச்சுக்கள், 4 பிரதியமைச்சுக்கள் ஜே.வி.பிக்கு வழங்குவதற்கு இணக்கம்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி உடன்பாடு செய்துகொள்ளப்பட முன்னர் - எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க நாடு திரும்புவார் என அந்தக் கட்சியின் உயர்பீட வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து ஜே.வி.பியின் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில் -

தற்போது இத்தாலியில் தங்கியுள்ள சோமவன்ச அமரசிங்க, பெரும்பாலும் கூட்டணி உடன்பாடு செய்துகொள்ளப்பட முன்னர் நாடு திரும்பக்கூடும். (12 ஆம் பக்கம் பார்க்க)

# கலைபண்பாட்டை கட்டியெழுப்புவதற்கு சமாதான சூழ்நிலை சாதகமாகியுள்ளது

## மகளிர் கலைபண்பாட்டு கழகப்பொறுப்பாளர் அருள்நிலா தெரிவிப்பு

சிதைந்துபோன தமிழர்களின் கலைபண்பாட்டு விழுமியங்களை கட்டி எழுப்புவதற்கு இந்த சமாதான சூழ் நிலை எம்மக்களுக்கு ஒரு வெற்றி யாக அமைந்துள்ளது என, மகளிர் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பா ளர் அருள்நிலா தெரிவித்தார்.

மகளிர் கலைபண்பாடு பற்றி யும், இதனால் ஏற்படும் பிரச்சினை கள் தொடர்பாகவும் நேற்றையதினம் யாழ். மாவட்ட அரசியற்துறை அலு வலகத்தில் நடைபெற்ற பத்திரிகை யாளர் சந்திப்பிலேயே, இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

ஆரம்பகாலங்களில், இருந்து பல கஷ்டங்களையும், துன்ப, துயரங்களை யும் எதிர்கொண்டு, அதற்குள் இருந் தும் நீச்சலடித்து கரைசேர்ந்த நாம், இன்று பல வடிவங்களில் பல தமிழ்பண்பாட்டுக் கருத்துக்களை யும் அதாவது, போராட்ட சூழ்நிலை யில் மக்கள் பட்ட அவலங்களையும் ஆழ அமர இருத்தி... கலையினூடே தான் வெளிக்கொணர முடிகின்றது.

இன்று பல நெருக்கடி சூழ்ந்த காலப்பகுதியிலும் இராணுவக் கட் டுப்பாடுள்ள யாழ் மண்ணில், நமது கலை வடிவங்களை தமிழரின் பாரம் பரியமாக, வெளியே கொண்டுவருவ தென்பது, இந்தச் சமாதான சூழ் நிலையில் நமக்கொரு வெற்றி யென்றே கூறவேண்டும்.

தமிழர்களின் அவலங்களோடு ஒன்றிப்பிணைந்த செயல்வடிவம் தான் நாடகங்களாகவும், திரைப் படங்களாகவும், பாடல்களாகவும் வெளிவருகின்றது. இதில் பெண்க ளின் பங்கு என்பது முழுதாக வெற் றியீட்டியுள்ளது.

ஒரு கலைஞன் எல்லாவற்றிற் கும் தயாராகவேண்டும் என்பத னால் பயிற்சிஎடுத்து வருகின்றோம். இன்னும் நிறையக் கற்கவேண்டிய தேவை இருக்கின்றது. அடிப்படை பயிற்சி எடுக்கும்போது, இசைய மைப்பாளர் முரளி அண்ணா, சிவரா மன் அண்ணா, சாந்தன் அண்ணா, போன்றோர் எப்பொழுது பயிற்சி வழங்கினாலும் இவர்களுக்குள்ளும் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. தலை வர் வே.பிரபாகரன்தான் கலையினை உருவாக்கவேண்டும் என்று, அதனை ஆரம்பிக்கச் சொன்னவர்.

இப்பொழுது வகுப்புக்களை எடுத்து, இந்த இசைக்கு முக்கியமாக இருப்பவர் இசைப்பிரியன் ஆவர். கலைஞர்களை ஒன்றுதிரட்டுவதில் கூட பல பிரச்சினைகள் ஏற்படுகின் றது. அதாவது, பெண் கலைஞர்கள் இணைந்துகொள்வதில் அவர்களு டைய அம்மா, அல்லது அப்பா ஏதோ ஒரு காரணங்களுக்காக சம்மதம் வழங்குவதில்லை.

பெண்கள் எல்லா இடங்களுக் கும் எந்த வேளையிலும் போகமுடி யாமலும், இடை நடுவே பங்களிப்புத் தராமல் விலகுவதும், புதிய பெண் கலைஞர்களை மறுபடியும் எடுத்து அதற்கான இடத்தினை நிரப்புவதில் பல கஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றது.

இந்தக் கலையினூடே மக்க ளுக்கு நல்ல தமிழ் சமூக மாற்றத் திற்கான கருத்துக்களையும், முன் வைத்தும் போராட்ட சூழலில் ஏற் பட்ட, அனுபவங்களையும், துன்ப, துயரங்களையும் வெளிக்காட்டியும் வருகின்றோம்.

தொழில் நுட்பரீதியிலான வளர்ச் சியில் தொடர்வதற்கு முயற்சி செய்து வருகின்றோம். இதற்கான வல்லுநர் கள் இங்கு இல்லாததால், வெளியி லிருந்து வருபவர்களை, இதற்குள் நாங்கள் ஈடுபடுத்தலாம் என்றிருக் கினறோம். நெருப்புநிலவு, கலையின் வடிவம், சூரியப்புதில்வர்கள், ஆகி யவை எங்களின் வெளியீடுகள் ஆகும்.


யாழ். குடாநாட்டில்
25 வது ஆண்டை நிறைவு செய்து
வெள்ளி விழாக் காணும்
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தை
வாழ்த்துகின்றோம்






1978 - 2004 தை - 18 ம் நாள்

அனுசரணையாளர்கள்:-

சாரங்கா நகைமாடம் அன் சென்ரர், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிரகாஸ் மின் ஒட்டு நிலையம் தபால் நிலைய வீதி, சாவகச்சேரி.

சண்ரேடர்ஸ் (சண்முகலிங்கம்) சந்தை உட்புறம் சாவகச்சேரி.

(சி-2149)



வெளிவந்துவிட்டது!

2004 ஆம் ஆண்டு
புதிய பாடத்திட்டம்
தமிழ் மொழியும் இலக்கியமும்
செயல் நூல்
தரம் 6

ஆக்கம்: பண்டிதர் திரு.சிவநடராசா

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

(585)



யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)



### விற்பனைக்கு

TATA - 450 சிவப்பு நிற CANDER 15000 Km ஓடிய நிலை யில் இல. 011 - W P-HK.2797 பினான்ஸ் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-265/1/2 புளுமண்டல் வீதி,
கொழும்பு - 13
T.P:- 011 2385530
0777 - 666704 (593)



### சிறு விளம்பரம்

**மணமகள் தேவை**

பிரான்சில் வசிக்கும் 35 வயது நிரம்பிய சதய நட்சத்திரமும் உதயத்து செவ்வாய் கொண்ட மணமகனுக்கு பெற்றோர் மணம களை தேடுகிறார்கள். மணமகள் வெளிநாட்டில் இருப்பது விரும்பத் தக்கது சாதகத்துடன் விண்ணப்பிக் கவும். விளம்பர இல 22 மே/பா நமது ஈழநாடு, இல, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/2154)

**தேவை**

ஸ்ரூடியோ வேலை பழக ஆர்வ முள்ள 20 வயதுக்குட்பட்ட ஆண் கள் தேவை யாழ்.மாநகரசபை எல் லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது. 31-01-2004 க்கு முன் விண் ணப்பிக்கவும். வேலை பழகும்போது ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும் விளம்பர இல 21 மே/பா நமது ஈழநாடு, இல, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/2153)



### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவை யான அனைத்து மின்சார உபகர ணங்களை மொத்தமாகவும், சில்ல றையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். TELESO NIC, RIKON, PACIFIC, USHA AND SUNDA வகையில் Fans, Toasters, Irons, Gas Cookers, Washing Machines, Food Jars, Blenders, Clocks, Rice Cookers, Televisio ns, Ceiling Fans, Mega Vacuum Flasks இன்னும் பல தரப்பட்ட உபகரணங்களும் உண்டு.

IZZY ENTERPRISES
164/1 Prince Street, Colombo-11.
T.P:- 2437843 Fax:- 075354304



நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல் அஜீத், கார்த்திக், ரோஜா நடித்த
உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
TOMP RAIDER II (சி-2004)



ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2005)



தில்லையம்பதி
GREAVES
மோட்டோர்ஸ்










இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2488, 021 - 2223820
AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்,
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
(சி-1499)

# கிருமிநாசினி, உரங்களின் விலை உயர்வு: விவசாயிகள் சாகும்வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

கிருமிநாசினிகள் மற்றும் உரங்களின் விலைகளை அரசாங்கம் அண்மையில் அதிகரித்ததைக் கண்டித்து, நாளைமுதல் அகில இலங்கை விவசாயிகள் சங்க அங்கத்தவர்கள் அனைவரும் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்தத் தகவலை அகில இலங்கை விவசாயிகள் சங்கச் செயலாளர் எஸ்.கே.சுபசிங்க - பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

பொலநறுவ, திகாமடுல்ல, அம்பாறை மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய நான்கு நகரங்களிலும், அரசின் விலை அதிகரிப்பிற்கு எதிராகச் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

விவசாயிகள் சுமார் எண்ணாயிரம் ஏக்கர் நிலத்தை செய்கைபண்ணாமல், கைவிட்டுள்ளனர். இந்த நிலம் பொலநறுவ மாவட்டத்திலுள்ளது. அத்துடன், பெரும் விளைச்சலைத் தரக்கூடிய அநுராதபுரம், குருநாகல், அம்பாந்தோட்டை போன்ற மாவட்டங்களில் கடந்த 2003/2004 ஆம் ஆண்டு பெரும்போகச் செய்கை மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை எரிபொருட்கள் மற்றும் விவசாய கிருமிநாசினிகளின் விலைகள் - கடந்த வருடம் ஆறு தடவைகள் அரசாங்கத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# காலாவதியான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வோருக்கு மரணதண்டனை

## சரத் அமுனுகம கோரிக்கை

நாட்டுக்குள் காலாவதியான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வோருக்கு, மரணதண்டனை வழங்கப்படவேண்டுமென பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம கேட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழுமபில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கோரினார்.

தமது அரசாங்கம் பதவியிலிருந்தபோது மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மாத்திரமே மருந்துகளை இறக்குமதி செய்து வந்தது. ஆனால், தற்போது அரசாங்கம் சதொச நிறுவனத்தின் மூலம் மருந்துகளை இறக்குமதி செய்து வருவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பின் புறநகரான கடவத்தையில் கண்டுபிடிக்கப்பட்ட காலாவதியான மருந்துகள் தொடர்பிலேயே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட காலாவதியான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்தவர் - அரசாங்க மருத்துவர் இல்லை எனவும் அரச மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது. (01)

# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டணி புதிய பெயர் வைப்பதில் இணக்கம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி என்ற பெயரில், புதிய கூட்டணியை உருவாக்க ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பேச்சுக்களை நடத்தி வருகின்றன.

இந்த இரு கட்சிகளுக்கும் இடையில் எதிர்வரும் 24 ஆம் திகதி கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இந்தக் கூட்டணிக்கே ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணிக்கான ஒரு சின்னமோ, தேர்தலில் போட்டியிடுவதற்கான ஒரு சின்னமோ இதுவரை தெரிவுசெய்யப்படவில்லை.

இந்தக் கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட முன்னர் சின்னம் தெரிவுசெய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு அடுத்தவாரம் கொழும்பில் ஆரம்பம்!

இலங்கையின் சமாதான முயற்சியைக் கண்காணித்து - உதவியும், ஒத்தாசையும் வழங்குவதற்காக ஜப்பானிய அரசினால் நியமிக்கப்பட்டிருக்கும் சிறப்புப் பிரதிநிதி யசூஷி அகாஷி இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கவுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டுத் தொடரில் இரண்டாவதாக நடைபெறவிருக்கும் கொழும்பு மாநாடு, எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும் என்று இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் தெரிவித்துள்ளது.

நாளை இலங்கைக்கு விஜயம் செய்யும் இவர் 22 ஆம் திகதி வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள், முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் ஜப்பானியத் தூதரகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிக்கும் உதவிவழங்கும் வகையில் 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சிறப்புத் தூதராக ஜப்பானிய அரசினால் நயமிக்கப்பட்ட யசூசி அகாஷி ஆறாவது தடவையாக இலங்கை வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர்களின் புதல்வர்கள் பிணையில் செல்ல அனுமதி!

அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்க, மஹிந்த விஜேசேகர ஆகியோரின் புதல்வர்கள் உட்பட 6 பேரை தலா ஐயாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல கொழும்பு கோட்டை நீதிவான் நேற்றுமுன்தினம் அனுமதி அளித்தார்.

குற்றத்தடுப்புப் பிரிவினரால் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட போதே இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பில் அமைந்துள்ள இரவுக் கேளிக்கை விடுதியொன்றில் இடம்பெற்ற இரு கோஷ்களுக்கிடையிலான மோதல் ஒன்றில் சம்பந்தப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே, இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த மோதல் சம்பவம் தொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் அரசாங்க வாகனம் ஒன்றையும் இவர்கள் சேதமாக்கியிருந்தனர்.

மோதலில் ஈடுபட்ட இரு கோஷ்டியினருக்குமிடையில் இணக்கப்பாடு ஏற்பட்டிருப்பதாக நீதிமன்றத்துக்குத் தெரிவித்ததையடுத்தே, நீதிமன்றம் இவர்களை பிணையில் விடுவித்தது.

இதேவேளை - நீதிமன்றத்தின் அனுமதியின்றி இவர்கள் வெளிநாடு செல்லமுடியாது என்றும் நீதிவான் அறிவித்தார்.

## சமாதான முயற்சியைத் தெளிவுபடுத்த ஜனமிலுமின திட்டம் அமுலுக்கு!

சமாதான முயற்சியைத் தெளிவுபடுத்த, நாட்டில் அரசாங்கம் ஜனமிலுமின என்ற திட்டத்தினை அமுல்படுத்தியுள்ளது.

இதன் ஆரம்பக்கட்ட நிகழ்வு - நேற்றுமுன்தினம் பொலநறுவ பிரதேசத்தில் இடம்பெற்றது.

நாட்டில் சமாதான முயற்சியைத் தெளிவுபடுத்தும் வகையில் அரசாங்கம் - ஜனமிலுமின என்ற திட்டத்தினை அமுல்படுத்தவுள்ளது. இதனடிப்படையில் குழுவொன்று கிராமங்கள்தோறும் சென்று, சமாதானத்தின் தேவையை உணர்த்தும் செயற்பாடாக இது கருதப்படுகிறது. இந்த நிகழ்வு - பொலநறுவயில் மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வு நாடளாவிய ரீதியில் அமுல்படுத்துவதற்குத் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (01)

## அரசியல் நிலைவரம் குறித்து ஆராய ஜனாதிபதி - பிரதமர் சந்திப்பர்!

(யாழ்ப்பாணம்)

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில விக்கிரமசிங்கவும் சந்தித்துப் பேச்சு நடததவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்தவாரம் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்புக் குறித்த திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆயினும் இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தே பேசப்படும் என்று தெரியவருகின்றது.

இதேவேளை - ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகார இழுபறியைத் தீர்ப்பதற்கென அமைக்கப்படட மனோ - மலிக் குழு மீண்டும் தமது பேச்சுக்களை ஆரம்பிக்கவிருப்பதாக அதிகாரபூர்வ வட்டாரங்களை மேறகோள்காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிக்க எடுத்த நடவடிக்கைகள் பயனற்றுப்போனது

## ஜனாதிபதியே காரணம் என்கிறார் ரணில்

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அரசாங்கம் எடுத்திருந்த நடவடிக்கைகள், ஜனாதிபதி முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக் கொண்டதனால் பயனற்றுப் போய்விட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமைகள், சமாதான முயற்சிகளின் எதிர்காலம் என்பவை குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் நடாத்தப்பட்ட இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கத்துடன் ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களைப் பறித்தெடுத்துக் கொண்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த அமைச்சுப் பொறுப்புக்களை எடுத்தவுடன் அரச தரப்பிலிருந்து 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்பக்கம் வருவார்கள் என்று ஜனாதிபதி எதிர்பார்த்திருந்ததாகவும், ஆனாலும் அவரது அந்த எண்ணம் நிறைவேறவில்லை எனவும் தெரிவித்த பிரதமர், பேச்சுவார்த்தைகளுடன் நேரடியாகத் தொடர்புடைய இந்த அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டதனால் சமாதான முயற்சிகள் பாதிப்படைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இது மக்களின் சமாதான முயற்சி, மக்களின் ஆணையுடன், அவர்களது வயிற்றில் எரியும் நெருப்பை அணைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சி என்று தனதுரையில் குறிப்பிட்ட பிரதமர், சமாதான முயற்சிகள் பாதிப்படைந்ததால், 2500 கோடி ரூபா பெறுமதியான முதலீடுகளை முதலீட்டாளர்கள் நிறுத்தி வைத்திருப்பதாகவும், 2004ஆம் ஆண்டுக்கென சர்வதேச நாணய நிதியம் வழங்குவதாக உறுதியளித்திருந்த 2000 கோடி ரூபா நிதியுதவியும் தடைப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளார்.

# நிதித்துறைகளில் மறுசீரமைப்பு போதியளவுக்கு இடம்பெறவில்லை

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய நிதித்துறைகளில் மறுசீரமைப்புப் பணிகள் போதியளவுக்கு இடம்பெறவில்லை என ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனே தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு அவசியமான நிதித்துறை மறுசீரமைப்புப் பணிகள், தற்போது நிலவும் அரசியல் சர்ச்சை காரணமாக மந்த நிலையை அடைந்துள்ளதாக அவர் மேலும் கவலை தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக 108 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நிதியமைச்சில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# க.பொ.த.உயர்தரப் பரீட்சைகள் ஏப்ரல் 2 ஆம் திகதி ஆரம்பம்!

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை - ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நடைபெறுமென பிரதிப் பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். இந்தப் பரீட்சை தொடர்பான விசேட அறிவுரைகள் வழங்கும் கூட்டம் நாளை பரீட்சைத் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல வலயக் கல்விப பணிப்பாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளதோடு, இப்பரீட்சைக்கான ஆரம்பக்கட்ட வேலைகளை முன்கூட்டியே ஆரம்பித்து, பரீட்சை நடவடிக்கைகளை திறமையாக மேற்கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.






மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 11ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வில் - விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஜெயம் தேசியக்கொடியேற்றுவதையும், மாவீரர் மேஜர் அபினாவின் தாயார் ஈகச்சுடரேற்றுவதையும், புலிகளின் ஆண்டான்குளப் பிரதேசப் பொறுப்பாளர் ஐ.மார்க்கன் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிப்பதை முதல் மூன்று படங்களிலும் - -திருகோணமலை கும்பிறுப்பிட்டியில் நடைபெற்ற நினைவுதின நிகழ்வில் கேணல் கிட்டுவின் உறவினர் ஈகச்சுடரேற்றுவதையும் காணலாம்.

## ஐந்தாவது ஒருநாள் போட்டியில்

# 4 ஓட்டங்களால் நியூஸிலாந்து பாகிஸ்தான் அணியை வென்றது



(வெலிங்ரன்)

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் வெலிங்ரனில் நடைபெற்ற ஐந்தாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில், நியூஸிலாந்து அணி நான்கு ஓட்டங்களால் மயிரிழையில் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணித் தலைவர் பிளமிங் - தமது அணி துடுப்பெடுத்தாடும் எனத் தெரிவித்தார்.

இதன்படி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் நியூஸிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றது. இதில் - மார்ஷல், மக்மிலன் இருவரும் முறையே 84, 81 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சொகைப் அக்தார், மொகமட் சமி, அஸார் ம:. மூட் மூவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களில் சபீர் அகமட், மொகமட் சமி, சொகைப் மலிக் மூவரும் தமது பத்து ஓவர்களை வீசி ஐம்பதுக்கு மேல் ஓட்டங்களை விட்டுக்கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 303 ஓட்டங்களையே பெற்றது. இதன் மூலம் நான்கு ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களில் யாசீர் ஹமீட் 48, இன்ஸ்மாம் உல் ஹக் 67, மொயின்கான் 52, அப்துல் ரஸாக் 89 ஓட்டங்களைப் பெற்றும், பாகிஸ்தான் அணியால் வெல்ல முடியவில்லை. இதில் - அப்துல் ரஸாக் ஐந்து சிக்ஸர்கள், ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக 40 பந்துகளில் அதிரடியாக ஆடி 89 ஓட்டங்களைக் குவித்தார்.

நியூஸிலாந்து அணி சார்பில் பந்துவீச்சில் மில்ஸ், ஓரம் இருவரும் இரண்டு விக்கெட்டுக்களையும் அடம்ஸ், விற்றோரி, ஸ்ரைறிஸ் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் நியூஸிலாந்து ஏற்கனவே தொடரைக் கைப்பற்றியிருந்ததுடன், நேற்றைய இறுதிப் போட்டியையும் வென்றுள்ளது.

## மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான

# நான்காவது டெஸ்ட் போட்டியில் வலுவான நிலையில் தென்னாபிரிக்கா

### கிப்ஸ், ஸ்மித் அபார சதம்



(செஞ்சூரியன் பார்க்)

தென்னாபிரிக்க - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையில் செஞ்சூரியன் பார்க்கில் நடைபெற்று வரும் நான்காவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா நான்கு விக்கெட்டுக்களை இழந்து 532 ஓட்டங்களைப் பெற்று மிகவும் வலுவான நிலையில் உள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணித்தலைவர் லாரா - களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதன்படி துடுப்பெடுத்தாடத் தொடங்கிய தென்னாபிரிக்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அணித்தலைவர் ஸ்மித்தும், கிப்சும் நல்ல அடித்தளத்தை இட்டனர்.

அணித்தலைவர் ஸ்மித் 139 ஓட்டங்களையும், கிப்ஸ் 192 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். றுடோல்ப் 37 ஓட்டங்களுடனும், ஹரி கோர்ஸ்டன் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். தற்போது கலிஸ் 83, மக்கன்சி 40 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் சர்வான் இரண்டு விக்கெட்டுக்களையும், எட்வேட்ஸ், கொலிமோர் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் நடந்த மூன்று போட்டிகளிலும் தென்னாபிரிக்கா இரண்டு போட்டிகளில் வென்று 2:0 என்ற நிலையில் முன்னணி வகிக்கின்றது.

# அவுஸ்ரேலிய பிரதமர் அணிக்கு ஸ்ரீவோ தலைமை தாங்குகிறார்!



(கன்பரா)

கங்கூலி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி, தற்போது அவுஸ்ரேலியாவில் மூன்று நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் போட்டியில் விளையாடி வருகிறது.

இந்திய அணி அவுஸ்ரேலியப் பிரதமர் லெவன் விளையாடும் அணியுடன் மோதும் ஒரு நாள் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி கன்பராவில் நடைபெறவுள்ளது.

சமீபத்தில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் தலைமைப் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற ஸ்ரீவோ அவுஸ்ரேலிய பிரதமர் அணிக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக ஸ்ரீவோ கூறியுள்ளார்.

# கபில்தேவின் சாதனையை விரைவில் முறியடிப்பேன்!

### இந்திய சுழல் பந்து வீச்சாளர் அனில் கும்ளே பேட்டி

(புதுடெல்கி)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய இந்திய வீரரான கபில்தேவின் சாதனைகளை முறியடிப்பேன் என்று- இந்திய சுழல் பந்துவீச்சாளர் அனில் கும்ளே கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

எனது பந்துவீச்சுக் குறித்து கடந்த காலங்களில் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அத்தோடு தொடர்ந்து ஓரங்கட்டப்பட்டேன். உலகக் கோப்பையில் ஆடமுடியாமற்போனது எனக்கு மிகுந்த ஏமாற்றமே.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட்டில், எனது பந்துவீச்சு மிகவும் திருப்திகரமாக இருந்தது. இன்னும் 18 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினால், 400 விக்கெட்டுக்களைத் தொடுவேன். எனது நோக்கமெல்லாம் கபில்தேவின் சாதனைகளை முறியடிப்பதுதான். அவரது சாதனையை முறியடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது எனக் கும்ளே கூறினார்.

கும்ளே 81 டெஸ்ட்டில் விளையாடி 382 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார். கபில்தேவ் 131 டெஸ்ட்டில் 434 விக்கெட்டுக்களைச் சாய்த்து இந்திய வீரர்களில் முதலிடத்திலும், சர்வதேச அளவில் 4 ஆவது இடத்திலும் உள்ளார்.



கபில்தேவின் சாதனைகளை முறியடிக்க கும்ளேக்கு 53 விக்கெட்டுக்கள் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

# பொடா தடைச் சட்டத்தை நீக்கி வைகோவை விடுவிக்கவேண்டும்!

### அத்வானியிடம் முலாயம்சிங் யாதவ் கோரிக்கை

(புதுடெல்கி)

உத்தரப் பிரதேசத்தில் மாயாவதி ஆட்சியின்போது உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களை முதலமைச்சர் முலாயம்சிங் யாதவ் கலைத்தார். இதனால், மாநிலத்தின் பல பகுதிகளில் முலாயம்சிங் யாதவ்வின் அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம் நடத்திவருகின்றார்கள்.



இதனால் சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக, துணைப் பிரதமர் அத்வானியுடன் முலாயம்சிங் யாதவ் நேற்று ஆலோசனை நடத்தினார்.

அவருடன் கட்சியின் பொதுச்செயலாளர் அம்ரீந்தர் சிங்கும் சென்றிருந்தார். அவர்கள் மாநிலத்தின் அரசியல் சூழ்நிலை குறித்தும் ஆலோசனை நடத்தினர். அத்வானியைச் சந்தித்த பிறகு முலாயம் சிங் யாதவ் நிருபர்களிடம் கூறியதாவது -

அயோத்திப் பிரச்சினையில் மத்திய அரசு நிலைக்கு எங்கள் ஆதரவு தொடரும். இரு சமூகத்தினரும் தற்போது ஒற்றுமையாக செயற்பட்டு வருகிறார்கள்.

அயோத்திப்பிரச்சினைக்கு நீதிமன்றம் மூலமாகவோ, பேச்சுவார்த்தை மூலமாகவோ தீர்வுகாணவேண்டும்.

பொடா சட்டத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள குந்தா தொகுதி எம்.எல்.ஏ ராஜா பையா, அவரது தந்தை உதய் பிரதாப் சிங், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். அத்துடன், பொடா சட்டத்தையும் உடனடியாக நீக்கவேண்டும் எனக் கோரியதாகத் தெரிவித்தார்.

# அ.தி.மு.கவுடன் கூட்டணி ஏற்படும்; பாரதீய ஜனதாக் கட்சி நம்பிக்கை!

### தமிழக பாரதீய ஜனதா கட்சித் தலைவர் தெரிவிப்பு

தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அ.தி.மு.க. தலைமையேற்க வேண்டும் என்று சமீபத்தில் பாரதீய ஜனதாக் கட்சி அழைப்பு விடுத்தது.

ஆனால், இது குறித்து அ.தி.மு.க. தரப்பிலிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை. தொடக்கத்தில் கூட்டணிக் கட்சிகளுக்கு ஆறு தொகுதிகள் மட்டுமே விட்டுக்கொடுக்க முடியும் என்று அ.தி.மு.க. அறிவித்திருந்தது. ஆனால், பாரதீய ஜனதா தரப்பில் 10 தொகுதிகளுக்கு மேல் எதிர்பார்க்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் அனைத்துத் தொகுதிகளிலும் அ.தி.மு.கவே வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குச் செல்லவேண்டும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார். இதன் மூலம் நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தனித்துப் போட்டியிடும் என்று அவர் சூசகமாகத் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் - தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் சி.பி.இராதாகிருஷ்ணன் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது -

நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. - பாரதீய ஜனதா இடையே கூட்டணி உருவாகும் என்ற நம்பிக்கை உள்ளது. எங்கள் இரு கட்சிகளுக்கும் இடையே தொகுதிப் பங்கீடு சுமுகமாக நடைபெறும்.

தி.மு.க. தலைமையிலான எதிர்க கட்சிகளின் கூட்டணியைவிட எங்கள் கூட்டணி யாராலும் எதிர்க்க முடியாத பலமான கூட்டணியாக அமையும் என்ற நம்பிக்கையுள்ளது.

தமிழக சட்டசபைத் தேர்தலின் போது, ஏராளமான தொகுதிகளில் போட்டியிட நாங்கள் விரும்பினோம். ஆனால், தி.மு.க. எங்களுக்கு 21 முதல் 23 தொகுதி வரையே ஒதுக்கியது. தொகுதி ஒதுக்கீட்டில் நாங்கள் எப்போதும் எந்தப் பிரச்சினையுமின்றி நடந்துள்ளோம்.

ஏற்கனவே, ஒரு முறை அ.தி.மு.கவுடன்கூட்டணி அமைத்திருக்கிறோம். அப்போதும் தொகுதிப் பங்கீட்டில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைப்பதில் எங்களுக்குள் எந்த இரகசியமும் இல்லை.

தேர்தல் கூட்டணி குறித்து பேச அ.தி.மு.க பொதுச்செயலாளரும், முதலமைச்சருமான ஜெயலலிதாவை - எங்கள் கட்சித் தலைவர்கள் சரியான நேரத்தில் சந்தித்துப் பேசுவார்கள்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள் யாரும் இரகசியமாக வந்து முதலமைச்சர் ஜெயலலிதாவை இதுவரை சந்திக்கவில்லை.

இதற்கிடையில் - கட்சியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதில் கூட்டணி அமைப்பது குறித்து ஆலோசனை நடத்தப்படுகிறது. மேலும், ஹைதராபாத்தில் நடைபெற்ற தேசிய செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் விவாதிக்கப்படும்.

கூட்டணி குறித்து அ.தி.மு.க. தரப்பிலிருந்து எந்தத் தகவலும் வராதது குறித்து நாங்கள் கவலைப்படவில்லை. ஏனென்றால், நாங்கள் அவசரப்படவேண்டியதில்லை.

எதிர்க்கட்சிக்கூட்டணி மிகவும் சுறுசுறுப்பாக இயங்குகிறது. அந்தக் கூட்டணியில் அதிக அளவில் கட்சிகள் உள்ளன. ஆனால், எங்கள் கூட்டணியில் அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே உள்ளதால் நாங்கள் அவசரப்பட வேண்டிய அவசியம் இல்லை.

கடந்த 1998 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டோம். அதுபோல தற்போதும் அந்தக் கட்சியுடன் நல்ல முறையில் கூட்டணி அமையுமென்று எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு சி.பி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

### புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 2 வருடங்களாகியும்

# கண்ணிவெடி, மிதிவெடி அபாயம்

# யாழ்.குடாநாட்டில் குறையவில்லை!

(யாழ்ப்பாணம்)

போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து இரண்டு வருடங்களாகின்றபோதும் யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி மற்றும் மிதிவெடி அபாயம் குறைவடையவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டில் மட்டும் 54 பேர் மிதிவெடிகளில் சிக்கித் தமது கால்களை இழந்துள்ளதுள்ளதாக அறிக்கைகள் கூறுகின்றன.

இவர்களுள் 90 வீதத்துக்கும் அதிகமானவர்கள் 30 வயதிற்குக் குறைந்தவர்கள் எனவும், அவர்களுள் 4 பேர் மாணவர்கள் என்றும் அந்த அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் காரைநகர் பகுதியைச் சேர்ந்த ஆறு மாணவர்கள் மிதிவெடியில் சிக்கித் தமது கால்களை இழந்துள்ளதுடன், ஒருவர் கண்ணிவெடிக்குள் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரி, சரசாலை, மட்டுவில் ஆகிய இடங்கள் அதிகூடிய கண்ணிவெடி அபாயம் நிலவும் பகுதிகளாக இனங்காணப்பட்டுள்ளன.



மிருசுவில் - தவசிக்குளம் றோமன் கத்தோலிக்க பாடசாலையை மீள ஆரம்பிக்குமாறு கோரி அப்பகுதி மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தை முற்றுகையிட்டு நடத்திய போராட்டத்தில் ஈடுபட்டடோரை காணலாம்.

# குளத்தில் மூழ்கி இரு சிறுவர் பலி!

## தர்மபுரம் பகுதியில் சம்பவம்

(கிளிநொச்சி)

குளத்தில் குளித்துக்கொண்டிருந்த சிறுவர்கள் இருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று தர்மபுரம் - பட்டிருப்புக்குளத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த இரண்டு சிறுவர்களின் சடலங்களும் குளத்திலிருந்து மீட்கப்பட்டன.

தர்மபுரம் மகாவித்தியாலய மாணவர்களான நியான்சி அஜீவன் (வயது 14), பாலசிங்கம் குணரூபன் (வயது12) ஆகிய சிறுவர்களே உயிரிழந்தவர்களாவர்.

இவர்களின் சடலங்கள் மல்லாவி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை தமிழீழ காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# குடாநாட்டில் விபத்துக்கள் அதிகம் ஏற்பட வெளிமாவட்டத்தை சேர்ந்தோரே காரணம்!

## பொலிஸ் வட்டாரங்கள் தகவல்

வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்களாலேயே யாழ்.குடாநாட்டில் அதிக வாகன விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதற்குக் காரணம் சந்திகளில் வீதிகள் தொடர்பான குறியீட்டுப் பலகைகள் இல்லாமையே என பொலிஸ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.நகரை அண்டிய சந்திகளில் சந்தி அறிமுகப் பலகைகள் இல்லாமையால் வெளிமாவட்டத்திலிருந்து வருகின்றவர்களுக்கு இங்குள்ள சந்திகள் தொடர்பாக எதுவும் தெரிவதில்லை. இதன்காரணமாகவே பெருமளவு விபத்துக்கள் ஏற்படுகின்றன.

கொழும்பு நகரப் புறங்களைப் போன்று இங்கு நாற்சந்திகள் அகலமானதாக இல்லை.

சந்திக்கொரு பொலிஸாரை நிறுத்துவதற்கு பொலிஸாரிடம் ஆளணி வசதியில்லை.

எனவே, சந்திகள் தொடர்பான அறிமுகப் பலகைகள் கட்டாயம் தொங்கவிடப்படவேண்டும் என பொலிஸ வட்டாரங்கள் தெரிவித்தன. (தீ)

### அபிவிருத்தி வேலைத்திட்ட கலந்துரையாடல்

தென்மராட்சி சனசமூக நிலையங்களின் சமாசத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான 2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சொண்ட் நிறுவனதின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா கலந்து கொள்ளவுள்ளார்.

தென்மராட்சி சனசமூக நிலையங்களின் சமாசத்திற்குட்பட்ட அனைத்து சனசமூக நிலைய உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சமாச செயலாளர் கேட்டுள்ளார்.

### வேரடி மண் விளையாட்டு விழா

பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய விளையாட்டு விழாவான வேரடி மண் விளையாட்டு விழா நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய், உடுவில், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள சிற்றூர்களில் காணப்படும் 50 கிராமிய விளையாட்டுக்கள் இந்த வேரடி மண் பாரம்பரிய கலை விளையாட்டு விழாவில் நடைபெறவுள்ளன.



நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனை திறப்புவிழா நிகழ்வில் தேசியக் கொடியை தமிழீழ சுகாதார சேவை துணைப்பொறுப்பாளர் தமிழ்வாணன் ஏற்றுகிறார். (03)

## வடக்கு - கிழக்குப் பகுதியில் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க உலகவங்கி முன்வந்துள்ளது!

போரால் சேதமடைந்த வடக்கு-கிழக்கில் அமைந்துள்ள வீடுகளைப் புனரமைப்பதற்கு உலகவங்கி முன்வந்துள்ளது.

இந்தப் புனரமைப்புத் திட்டத்தை தயாரிப்பதற்காக உலக வங்கியின் சிறப்புக் குழு ஒன்று விரைவில் கொழும்பு வரவுள்ளது.

வடக்கு - கிழக்கில் போரினால் சேதமடைந்திருக்கும் 3 இலட்சத்து 25 ஆயிரம் வீடுகளை புனரமைப்பதற்கு 15 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர் தேவை என்று உலக வங்கியின் அனைத்துலக அபிவிருத்திச் செயலகம் தெரிவித்துள்ள நிலையில், உலகவங்கியின் குழு கொழும்பு வருகிறது.

விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் விடுத்திருக்கும் கோரிக்கையின் பேரிலேயே வீடுகள் புனரமைப்புக்கு உலகவங்கி உதவியளிக்க இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

# சின்னஞ்சிறு செய்திகள்

### கேணியடியில் சங்கிலி திருடியவர் பொலிஸாரால் கைது!

(கொக்குவில்)

கொக்குவில் - கேணியடிப் பகுதியில் வைத்து சங்கிலி திருடியவர் யாழ். பொலிஸ் நிலைய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கொக்குவில் - கேணியடிப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் ஆறாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி ஒன்று திருடப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவந்தவேளையிலேயே சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சங்கிலித் திருட்டுத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (தீ)

### கல்வயலில் தென்னம் பிள்ளைகள் விநியோகம்!

(சாவகச்சேரி)

கல்வயல் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு தலா 02 தென்னம் பிள்ளைகள் வழங்கப்படவுள்ளது.

இதுவரை எந்த உதவியையும் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தென்னம் பிள்ளைகள் வழங்கப்படவுள்ளதால், அவர்கள் தமது விபரங்களை இன்று தனது அலுவலகத்தில் பதிவுசெய்யுமாறு கல்வயல் கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (24)

### சுதந்திர தினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டிக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சுதந்திரதினத்தை கறுப்பு தினமாக அனுஷ்டிக்க யாழ். குடாநாட்டின் பொது அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் நான்காம் திகதி இலங்கை தனது 55 வது குடியரசு தினத்தினைக் கொண்டாடவுள்ளது.

இந்நிலையில், அத்தினத்தில் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டு கறுப்பு தினமாக அனுஷ்டிக்க இந்த அமைப்புக்கள் முடிவு செய்துள்ளன.

### திருத்தப்படாத வீதிகளால் பொதுமக்கள் சிரமம்!

(கொக்குவில்)

வண்ணை - வடமேற்கு வயல் கரை வீதி மற்றும் முருகமூர்த்தி வீதி, லோட்டஸ் வீதி, நாவலடி வீதி, துரைராசா வீதி ஆகியன செப்பனிடப்படாமல் பல வருடங்களாக இருந்து வருகின்றன.

அதேவேளை - மானிப்பாய் வீதியில் ஆறுகால்மடம், குஞ்சு மதகுப் பகுதிக்குட்பட்ட பிரதான வீதிகள் படுமோசமாக - குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் வாகனங்களில் செல்வோர் மற்றும் பாதசாரிகள் சிரமங்களுக்கு மத்தியில் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். (206)

### எய்ட்ஸ் தடுப்பு விளம்பரப் பலகை!

(நெடுந்தீவு)

எய்ட்ஸ் தடுப்புத் தொடர்பான விளம்பரப் பலகையொன்று குறிகாட்டுவான் சந்திப்பகுதியில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ். கிளையினரால் நிறுவப்பட்டுள்ளது. (113)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றல்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடங்களிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான விசர் நாய்க்கடி தடுப்பூசி மருந்து ஏற்றும் செயற்பாடு நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாட்கள் வரை இடம்பெறவுள்ளது.

நாளை காலை 9 மணிமுதல் 11 மணிவரை திருநெல்வேலி சந்தி வை.எம்.சி.ஏ. மண்டபத்திலும் -

11.30 மணிமுதல் 1.30 மணிவரை திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலையத்திலும் -

20 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை நல்லூர் பிரதேச சபையிலும் -

11 மணிமுதல் 12 மணிவரை பாரதி சனசமூக நிலையத்திலும் - 12.30 மணிமுதல் 1.30 மணிவரை பாற்பண்ணை வீதியிலுள்ள கம்பன் சனசமூக நிலையத்திலும் -

21 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை இராமலிங்கம் வீதியிலுள்ள வாலையம்மன் சனசமூக நிலையத்திலும் -

11 மணிமுதல் 12 மணிவரை சிவன் வீதி, மாரியம்மன் கோவிலடியிலும் - 12.30 மணிமுதல் 1.30 மணிவரை கலைச்சுடர் சனசமூக நிலையத்திலும் -

22 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை கல்வியங்காடு இலங்கநாயகி சனசமூக நிலையத்திலும் 11 மணிமுதல் 12 மணிவரை கலைமகள் சனசமூக நிலையத்திலும் - 12.30 மணிமுதல் 1.30 மணிவரை கலைத்தமிழ் கலாமன்ற சனசமூக நிலையத்திலும் வைத்து விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



மூத்த பத்திரிகையாளர் கோபாலரத்தினத்தின் பத்திரிகைப் பணியில் அரைநூற்றாண்டு எனும் நூல் வெளியீட்டு விழாவில் கலாநிதி க.குணராஜா மங்கள விளக்கை ஏற்றுகிறார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : க.திலக்ஷன்
முகவரி : பிரதான வீதி, சங்கானை.

பத்தாவது அகவையில்



பெயர் : ம.சரண்ணியா
முகவரி : 91, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை



# விளையாட்டு அரங்கம்

# சக்கரங்கள்

எழுபதுகளின் பிற்பகுதி மற்றும் எண்பதுகளின் ஆரம்பப்பகுதி - ஏறத்தாழ ஒரு தசாப்தமே. மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் அசைக்கமுடியாத முதன்மைச்சக்தி. ஆனால், அவர்களது வீழ்ச்சியும் திடிரெனவே ஏற்பட்டது. இந்தவகையில் கடந்த பத்தாண்டுகளாக முதன்மைநிலையில் இருந்து வருபவர்கள் அவுஸ்திரேலிய அணியினர். இந்தக் காலப்பகுதியில் அவர்களுக்கே உரிய பாணியில் இலகுவான வெற்றிகளைக் கண்டுகொண்டார்கள்.

எந்த நாட்டையும்விட கூடுதலான டெஸ்ட் ஒருநாள் போட்டிகளை வென்றனர். இரண்டு தடவை உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். எதுவாக இருந்தாலும், உபகண்டத்தில் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொண்டபோது, அவர்களது முதன்மைநிலையில் சிறிது தளம்பல் காணப்பட்டது என்பதும் உண்மையே.

தற்பொழுது ஸ்ரீவ்வோ ஓய்வுபெற்ற நிலையில், ரிக்கி பொண்டிங் பாரியபொறுப்பைச் சுமப்பவர் ஆகிறார். அதாவது, அவுஸ்திரேலிய அணியின் முதன்மை நிலையைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், ஒருநிலை மாறுகாலத்திலா பொண்டிங் தலைமை ஏற்கிறார் என்பதும், இவர் இந்தச் சவாலை எவ்வாறு முகங்கொள்ளப் போகிறார் என்பதுதான் முக்கியம்.

பொண்டிங்கின் முதலாவது சோதனை இலங்கையில்தான் ஆரம்பிக்கப்போகிறது. பெப்ரவரியில் இலங்கை வரும் அவுஸ்திரேலிய அணியினர் - இரண்டு டெஸ்ட் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடப்போகிறார்கள். ஆனால் இதேவேளை, இலங்கை அணி மீள மறுமலர்ச்சி பெற்று வருகின்றது. முத்தையா முரளிதரன் இங்கிலாந்து அணியைத் திணறடித்தது ஒருசான்று. அடுத்து ஜயசூரியா, அத்தப்பத்து, சிறப்பாக மீண்டும் உயர்தகமை பெற்றுவிட்ட மஹேல ஜயவர்த்தன போன்றவர்களையும் குறிப்பிடவேண்டும். அவுஸ்திரேலியாவை இவர்கள் எவ்வாறு சுலபமாக எடுத்துவிடமுடியாதோ, அதேபோல இவர்களையும் அவுஸ்திரேலியா சுலபமாக எடுத்துவிடமுடியாது.

மறுவளமாக, இந்தியாவிடம் அவுஸ்திரேலியா ஆச்சரியப்பட்டுப்போனமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை மக்ரா, ஷேன்வோர்ன், ட்ரன் லீமன் மூவரும் இந்தியாவிற்கெதிரான அவுஸ்திரேலிய அணியில் இருக்கவில்லை என்பதும் உண்மையே. ஆனால், இவர்களுக்குப் பதிலாக அணிகுள் வந்தவர்கள் எதனையும் சாதித்துவிடவில்லை என்பதும் உண்மையே. இந்த வேளையில் உபாதைகளிலிருந்து மீண்டுள்ள கிளெயின் மக்ராவும் ஒரு வருடத்தடையின் பின், ஷேன்வோர்னும் இலங்கை வருகிறார்கள். ஆனால், இப்போதுள்ள வினா - இவர்களின் உயர்தலைமை இன்னும் எவ்வளவு காலத்துக்கு என்பதுதான்.

நீண்டநோக்கில் பார்க்கும்போது அவுஸ்திரேலிய அணி சில பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்பது வெள்ளிடைமலை. மக்ரா, ஷேன்வோர்ன் இருவரும் ஓயவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். இநத நிலையில் கில்கிறிஸ்ட், ஹேய்டன் மற்றும் லேமனும் இருக்கிறார்கள். மக்ராவுக்கும், லேமனுக்கும் முப்பத்துநான்கு வயதாகிறது. வோர்ன் 35 வயதை எட்டிக்கொண்டிருக்கிறார்கள். கில்கிறிஸ்ட், ஹேய்டன் இருவரும் 33 வயதை அடைந்தவர்கள். அநேகமாகச் சராசரியாக அவதானிக்கும்போது அவுஸ்திரேலிய வீரர்கள் வயது கூடியவர்களாகவே இருக்கிறார்கள். இந்த நிலையில், புதிய வீரர்கள் பலரை ஒரேநேரத்தில் அணிக்குள் உள்வாங்குவது அவுஸ்திரேலிய அணிக்குப் பாதமாகவே அமையும் என்று நிச்சயம் கூறமுடியும்.

அவுஸ்திரேலிய அணி பற்றி பேசும்போது, உன்னத நிலையிலிருக்கும் அணிகள் வீழ்ச்சி காண்பது ஒருகட்டத்தில் நிகழ்ந்தே தீரும் என்பது உண்மை என்றாலும், இது குறுகிய காலத்தில் அவுஸ்திரேலியாவிற்குப் பொருந்தாது என்றே கருதப்பட்டது. ஆனால், நிகழ்வுகள் வேறுவகையில் அமைகின்றனபோலவே தெரிகின்றன.

# சுழல்கின்றன!

நான்கைந்து உயர்தகைமையுள்ள வீரர்கள் ஒரேவேளையில் அணிக்குள் வரும் அந்த அணி - மிகப்பலமாக அமைந்துவிடும் அதே வேளை, அத்தகைய குழுவினர் ஒரேவேளையில் ஓய்வுபெறும் காலம் வரும் என்பது உண்மை. இதுவே மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு அதன் பொற்காலத்தில் நடந்தது. இதுவே அவுஸ்திரேலியாவுக்கும் நடைபெறும் சாத்தியம் உள்ளது. இருந்தபோதும், மேற்கிந்தியத்தீவுகள் அணி வீழ்ந்த அளவிற்கு அவுஸ்திரேலியா வீழும் என்று எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில் அவர்களது உள்ளூர், முதல்தர, பிராந்தியப் போட்டிகள் மிகவும் உயர்தரம் வாய்ந்தவை. இருந்தபோதும், அவுஸ்திரேலியாவின் ஆதிக்கம் குறைவடையும் என்பதை உறுதிசெய்ய இயலும் .

சௌரவ் கங்குலி -இந்தியாவில் வைத்து அவுஸ்திரேலியரைத் தொடரில் தோற்கடித்தபோதும், தற்போது அவுஸ்திரேலியாவில் வைத்து தமது பெருவீச்சைக் காடடியிருப்பதும் அவருக்கு பெரும் பாராட்டுக்கள் குவிந்திருக்கின்றன.



லக்ஸ்மன் - டிராவிட்
அச்சாணியை அசைத்தவர்கள்

உண்மையாக உலகில் அதிசிறந்த துடுப்பாட்ட வரிசை - இந்திய அணியிலேயேயுள்ளது. அனில் கும்ளே இன்றும் உன்னதமாகப் பந்து வீசிக்கொண்டிருக்கிறார். அதேவேளை ஹர்பஜன்சிங் சுகதேகியாகத் தேறி அணிக்குள்வர, இளம் இரத்தங்களான இர்பான் பத்தான், லக்ஸ்மிபதி பாலாஜி போன்றவர்களும் சேர்ந்து இணையும்போது, இந்தியக் கிரிக்கெட் அணி மிகக்கணிப்புக்கிடமானதாக இருக்கும். சர்வதேச ஓட்டத்தில் ஒரு மாற்றம் ஏற்படுவதும் கிரிக்கெட் ஆட்டத்திற்கு ஆரோக்கியமானதல்வா?

- றெக்ஸ் கிளமன்ரைன்

# மிலேனியம் சிந்தனைகள்

ரகர் அல்லது ரக்சி அல்லது ஓவல்ஷேப் பந்து விளையாட்டு (செல்லப்பெயர்) என அழைக்கப்படும் ஆட்டமானது எம்மண்ணில் இல்லை. ஆனால், அது சர்வதேச விருப்பையும், விலாசத்தையும் கொண்ட விளையாட்டு. இங்கு குறிப்பிட முனைவது இந்த விளையாட்டைப் பற்றியல்ல. இது ஆபிரிக்காவில் நடைபெற்ற ரக்பி 7 சுற்றுப் போட்டியில் - இலங்கை அணி நிர்வாகிகள் மேற்கொண்ட ஒரு குளறுபடி பற்றிய விடயமே ஆகும்.



ருனாகோ

அம்மம்மா வாழ்க

அதாவது, இந்தத் தொடருக்கு வீரர்கள் தெரிவுசெய்யப்படமுறை குறித்த சர்ச்சைகள், செல்வாக்குகளின் செல்வாக்கு, அதனால் யார் யாரோ அணிக்குள் உள்வாங்கப்பட்டிருப்பது எனறெல்லாம்போய்; உச்சக்கட்டமாக ஒரு தென்னாபிரிக்க வீரனை இலங்கை அணிக்குள் இணைநது விளையாடிய பரிசுகேடு தற்போது வெளியாகியிருக்கிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்றது போல்ஸ் சுற்றுப்போட்டியின் கால்இறுதியாட்டம் ஒன்றிலாகும். இந்தவிடயம் விளையாட்டுப் பரப்பில் இப்போது பரபரப்பாகப் பேசப்படுகின்றது. அதுவும், தகுதியான வீரர்கள் நால்வர் இருக்க, அவர்களைப் புறந்தள்ளி இந்தத் திருவிளையாடலை நிர்வாகிகள் செய்திருக்கிறார்கள். இந்த விடயம் பற்றி விளையாட்டுதுறை அமைச்சர் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.

ரக்பியைப் பொறுத்து இலங்கை அணியில் வேறு நாட்டவர் விளையாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது முதலாவது விடயம். இரண்டாவது விடயம் - எந்த ஒரு அணியும் சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்ள முன்பு, விளையாட்டுத்துறை அமைச்சின் அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும். இந்த விடயத்தில் இது இரண்டுமே மீறப்பட்டிருக்கின்றது. அண்மைக்காலமாக இலங்கை விளையாட்டுத்துறைச் சம்பவங்கள் சில, மிகவும் கேலிக்கிடமாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது என்றால், மேற்கிந்தியத் தீவுகளின் துடுப்பாட்ட விரர் ருனாகோ மோர்டனை என்ன செய்வதென்றே தெரியவில்லை.

இவர் 2002 ஆம் ஆண்டு இலங்கையில் ICC சம்பியன்சிப் போட்டிகளுக்காக வந்தவர். இவர் - நடத்தைகளால் கிரிக்கெட் ஒழுக்காற்றுக் குழுவினரால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டவர். இப்போது ஒரு கத்திக்குத்துச் சம்பவத்தில், ஒருநாள் சிறைவாசம் அனுபவித்துவிட்டு, பிணையில் வெளியே வந்திருக்கிறார். 2001 ஆம் ஆண்டில் பிராந்திய அணியிலிருந்து வெளியேற்றப்பட்டவர். அதன்பின்தான் இலங்கை வந்தார். சர்வதேச ரீதியில் தேசிய அணிக்குள் இடம்பிடிக்க ஒவ்வொரு வீரரும் தலைகீழாக நிற்கும் காலமிது. ஆனால், இவர் இலங்கையிலிருந்து ஒரு சின்னப்பொய் சொல்லிவிட்டு, கரிபியன் பறந்துவிட்டார். இது கண்டுபிடிக்கப்பட்டு, பின்னர் அபராதமும் விதிக்கப்பட்டது. அவர் சொன்ன காரணம் -தனது அம்மம்மா இறந்துவிட்டார். அதனால்தான் சுற்றுப்பயணத்திலிருந்து விலகினேன் என்பது. ஆனால், ஒழுக்காற்றுக்குழு கண்டுபிடித்த உண்மை -அம்மம்மா 16 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார் என்பது. இந்தச் செய்தியை அறிந்த சிறுவனொருவன் தங்கள் அம்மம்மாவை பலமுறை கொல்லும்போது, தங்கள் சேருக்கு மட்டும் ஏன் கோபம் வருகின்றது என்று ஆதங்கப்படுகின்றான்.

- நிமலா

# வானலைகள் வடக்கே வருமா?

ஆசிய வெற்றிக்கிண்ண ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் - இந்த வருடம் ஜூன் மாதத்தில் இலங்கையில் நடைபெறவுள்ளன. இந்த வகையில் இலங்கையில் ஆசியக்கிண்ணப்போட்டிகளை நடத்துவதற்கான சம்மதத்தை ஆசிய கிரிக்கெட் சபையிடமிருந்து பெற்றுக்கொள்வதில் இலங்கை கிரிக்கெட்சபை வெற்றி பெற்றுள்ளது என்றே கூறவேண்டும்.



கவாஸ்கர் - கபில்
எங்களுக்கு எட்டுமா

இந்தப் போட்டியில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பங்குகொள்கின்றன.

2000 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஆசிய கிண்ணச் சுற்றுப்போட்டி பங்களாதேஷில் நடைபெற்றபோது, இலங்கையை 39 ஓட்டங்களால் தோற்கடித்து பாகிஸ்தான் சாம்பியன் பட்டம் வென்றது. இதேவேளை, இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவிருந்த சார்ஜா போட்டிகளில் இலங்கை அணி பங்குகொள்ளாது என அறிவிக்கப்படுகின்றது.

இதற்குக் காரணம் - சார்ஜா கிரிக்கெட் ஏற்பாட்டாளர்கள் (CBFS) வேறு இரு நாடுகளையும்கூட, சார்ஜா போட்டிகளில் இணைத்துக்கொள்ள முடியாதநிலையே காணப்படுகின்றது.

ஏனெனில் முக்கியத்துவம் வாய்ந்த இந்திய - பாகிஸ்தான் டெஸ்ட் மற்றும் ஒரு நாள்போட்டிகள் ஏப்ரல் மாதத்தில் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளன. இதுவே சார்ஜா போட்டிகள் தடைப்பட முக்கிய காரணமாக அமைகின்றது.

இதேவேளை, பெப்ரவரியில் அவுஸ்திரேலிய அணியினர் இலங்கை வருகின்றார்கள் மறுவளமாக இலங்கை அணியினர் ஜுலை மாதத்தில் மீண்டும் இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்காக அவுஸ்திரேலிய செல்லவுள்ளனர்.

இது ஒரு புறமிருக்க, பெப்ரவரியில் அவுஸ்திரேலியா செல்லவுள்ள இலங்கை அணித்தெரிவும், தலைவர் தெரிவும் இன்னமும் நடந்து முடிந்தபாடாக இல்லை. இலங்கையின் பயிற்றுநர் ஜோண்டைசன் இல்லாமையும், மாகாணங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருப்பதுமே இந்தத் தாமதத்திற்குக் காரணமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தத் தெரிவுகள் - இந்த மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஆர்வத்திற்குரிய விடயமாக இருக்கப்போவது - அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் இரண்டு அணித்தலைவர்கள் இருக்கப்போகிறார்களா? அல்லது மாவன் அத்தப்பத்து இரண்டு அணிகளுக்கும் தலைமை தாங்கப்போகிறாரா என்பதே?

காயத்ரி

# மலர்கள் பல சுகந்தம் ஒன்று




**2007** ஆம் ஆண்டின் கரிபியன் தீவுகளில் ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் (உலகக் கிண்ணம்) போட்டிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, விடை தெரியாத பல வினாக்கள் எழுந்தவண்ணமேயுள்ளன.

இதற்குக் காரணங்கள் நிறையவே உள்ளன. மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒன்றுதான். ஆனால் அரசுகள் வேறு, அரசியல் சிந்தனைகள் வேறு. ஆனால், பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளாக இவை எல்லாம் இருந்தன என்பது உண்மை. 2007 ஆம் ஆண்டில் தன்னாட்சியும், இறைமையும் கொண்ட பத்து நாடுகளில் உலகக் கிண்ணப் போட்டிகள் அரங்கேறவுள்ளன.


ரவிறம்பார் உதயமாகிறேன்

எனவே, கிரிக்கெட் போட்டிகளில் தொடர்புபட்டவர்கள் அந்தந்த நாடுகளுக்குரிய குடிவரவு, குடியகல்வு சட்டதிட்டங்களின் ஊடே கடந்து செல்லவேண்டியிருக்கும். அதோடு, குறைந்தது ஐந்து வித்தியாசமான நாணயப் பரிமாற்றங்களுக்கும் உள்ளாகவேண்டியிருக்கும். ஐக்கிய அமெரிக்கா ஒரு சில ஆட்டங்களைத் தன்நாட்டில் நடத்த விரும்பும்வேளையில், பேர்முடா மற்றும் கனடாவும் இந்த ஆசைகளை வெளியிட்டு இருக்கும்வேளையில், மேற்கண்ட பிரச்சினைகள் இன்னும் உக்கிரமாக இருக்கும்.

ஆட்டங்களை நடாத்தவிருக்கும் கரிபியன் நாடுகளில், அதிகூடிய மக்கள் தொகை கொண்ட நாடு ஜமெய்க்காத்தீவு. ஜமெய்க்காவின் மக்கள் தொகை 26 இலட்சம் மட்டுமே. மற்றவையெல்லாம் இதனையும்விட மிகக்குறைந்த மக்கள் தொகை கொண்டவையே.


லாரா வருக வருக

மேலும், பலவீனமுற்ற பொருளாதார நிலை, கட்டுப்படுத்தப்பட்ட உட்கட்டுமானம் என்பன இன்னும் பிரச்சினை.

இதுவரையில் கிரெனடா, சென்லூசியா மற்றும் ரினிடாட்டிலுள்ள குயீன்ஸ் பார்க் ஓவல் ஆகியவையே எதிர்பார்க்கப்படும் தகுதியைக் கொண்ட அரங்குகளாக இருக்கின்றன. மேலும், சென். லூசியாவிலுள்ள பீஸோஜொர் மைதானம், 28,000 ரசிகர்கள் அமர்ந்து ஆட்டம் பார்க்கக்கூடியது. குயின்ஸ் பார்க் ஓவலும் கூடியளவு ரசிகர்களைக் கொள்ளக்கூடியது. மற்றவையெல்லாம் 15,000 பேருக்குமேல் அடக்கமுடியாதவை.

கரிபியன் களியாட்டத்தில் கலந்து கொள்ளப்போகின்ற நாடுகளின் எண்ணிக்கை பதினாறு. இவர்களுக்கு மிகக் கௌரவமான இருப்பிட வசதிகள் மற்றும் நேரகாலம் பிசகாத போக்குவரத்து வசதிகள் அமைத்துக் கொடுப்பது - பாரிய சுமையும், அழுத்தமும் நிறைந்தவையாக இருக்கப்போகின்றன.

அத்தோடு, பல்லாயிரம் பார்வையாளர்களின் நாடுகளுக்கிடையிலான போக்குவரத்து. பொதுவாகக் கடல்மார்க்கமாக இருந்தாலென்ன, மட்டுப்படுத்தப்பட்ட விமான மார்க்கமாக இருந்தாலென்ன .இப்படியான நிகழ்வொன்றின் தேவையைப் பூர்த்திசெய்யும் ஆயத்தநிலையில் இல்லையென்பது உண்மை.

ஒரு சந்தர்ப்பத்தில் 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளை அவுஸ்திரேலியாவில் நடாத்தினால் என்ன என்ற சிந்தனையும் உருவாகி, இப்போது மறைந்திருக்கிறது. என்றாலும், அவசியதேவைகள் பூரண திருப்தியுடன் நிறைவேற்றப்படவில்லை என்பது கசப்பான செய்தி.


பக்னர் தலைவிதி என் கையில்

ரினிடாடில், கயானாவில், பார்படொஸ் தீவில் (கென்சிங்ரன் ஓவல்) மைதான அரங்கவேலைகள் வேகமாக முடுக்கிவிடப்பட்டுள்ளன. கயானாவில் இந்திய உதவியுடன் மைதானம் புனரமைக்கப்படவுள்ளது.

அன்ரிகுவாவிலும் மைதான வேலைகள் வேகமாக நடைபெறுகின்றன. கரிகொம் (**Caricom**) அமைப்பு, கரிபியன் கொம்யூனிட்டி அன்ட் கொமன் மார்கட் போன்ற அமைப்புக்கள் அரச நிலையில் நிறைவேற்றவேண்டிய கடமைகள் மற்றும் அவர்களின் காரியங்களுக்கான முன்னுரிமை கொடுத்தல் என்பவற்றில் கூடியகவனம் செலுத்துகின்றன.

**ICC**, மேற்கிந்திய கிரிக்கெட்சபை (**W.I.C.B**), கரிபியன் சார்ந்த சர்வதேச அமைப்புகள், முக்கிய அரசாங்கங்கள் எல்லாம் இணைந்தே, 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளை வெற்றிகரமாக நடாத்தமுடியும். வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென்பதே கிரிக்கெட் ரசிகர்களின் விருப்பம். **- நிர்மலன்**

# மூவேந்தர்களில் சக்கரவர்த்தி யார்?


கங்குலி இளவரசன்

முடிந்தும் முடியாத உணர்ச்சித் தொடரான இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட்போட்டித்தொடரைத் தொடர்ந்து - தற்போது இந்தியா, அவுஸ்திரேலியா, சிம்பாப்வே அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் போட்டித்தொடர் - கடந்த 9 ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகிறது.

முதல் போட்டி இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில், மெல்பேர்னில் நடைபெற்றது. விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில், அவுஸ்திரேலிய அணி -கடுமையாகப் போராடி வெற்றிபெற்று, ஒருநாள் போட்டிகளிலும் தாங்கள் சிங்கங்கள் என்று நிரூபித்துவிட்டார்கள்.

ஆனால், அவுஸ்திரேலிய அணி - அந்தப் போட்டியில் மிகுந்த நெருக்கடியை எதிர்கொண்டுதான் வெற்றி பெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி - முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தொடக்கம் சிறப்பாக அமைந்தாலும், ஓவர்கள் செல்லச் செல்ல அவுஸ்திரேலிய அணியின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளியில் சரியத்தொடங்கின.

ஆனால், எந்த அணியிலும் இல்லாத சிறப்பம்சம் அவுஸ்திரேலிய அணியில் காணப்படுவதால், விக்கெட் வீழ்ச்சி தடைப்பட்டது. எந்தவொரு அணியிலும் பின்வரிசைத்துடுப்பாட்ட வீரர்கள் நிலைத்து நின்று ஆடுவதில்லை. முன்வரிசை விக்கெட் நான்கைந்து விழுந்தவுடன், இவர்கள் பதட்டத்தினால் ஆட்டமிழந்துவிடுகின்றனர். ஆனால், அவுஸதிரேலிய அணியில் அந்தத் துர்ப்பாக்கியம் இல்லை. மைக்கல் கிளார்க், ஹார்வே, அன்டி பிக்சல் போன்ற பின்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் எந்த ஒரு இக்கட்டான நேரத்திலும் நிதானமாகவும், அதேநேரத்தில் அதிரடியாகவும் ஆடி, அணியின் ஓட்ட எண்ணிக்கையை வலுப்படுத்துவார்கள்.

முதல் போட்டியில் அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் அன்ரூ சைமன்ஸுடன் ஜோடி சேர்ந்த கிளார்க் - சிறப்பாக துடுப்பெடுத்தாடி, அணிக்கு ஒரு வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொடுத்தார்.

ஆனால், இந்தப் போட்டியில் இந்திய அணி ஆரம்பித்த அதிரடி ஆட்டத்திற்கு நிச்சயம் வெற்றி பெற்றிருக்க வேண்டும். ஆனால், பின்வரிசை துடுப்பாட்ட வீரர்களின் "திருவிளையாட்டால்" வெற்றியைக் கோட்டை விட்டார்கள். சௌரவ் கங்குலி துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்ததால், போட்டி தலைகீழாக மாறியது. அவுஸ்திரேலிய அணியின் பின்வரிசைபோல, இந்திய அணியின் பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் - அதுவும் பந்து வீச்சாளர்கள் சிறிது நிலைத்து நின்று ஆடினால், இப்படியான பல தோல்விகளை இந்திய அணி தவிர்க்கமுடியும்.

அடுத்து 11 ஆம் திகதி சிட்னியில் நடைபெற்ற போட்டியில், அவுஸ்திரேலியா - சிம்பாப்பே அணிகள் மோதின. சிம்பாப்பே அணி அவுஸ்திரேலிய சிங்கத்தை உசுப்பியதன் விளைவை நன்றாகவே அனுபவித்தது - அனுபவிக்கும். சிம்பாப்வே அணியின் தலைவர் ஹீத் ஸ்ரீக் - அவுஸ்திரேலிய அணி பற்றிய சில கருத்துக்களை வெளியிட்டார். அவர் வெளியிட்ட கருத்தில் - அவுஸ்திரேலிய அணியின் வீரர்கள் பலர் வயதானவர்கள் என்றும், ஏ அணியில் பல இளம் சிங்கங்கள் திறமையாக விளையாடும்போது, அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்காது இந்த வயதான வீரர்கள் ஏன் தொடர்ந்தும் அணியில் இடம்பெறுகிறார்கள் என்றார்.

அவுஸ்திரேலிய சிங்கத்தைப் பார்த்து சிம்பாப்வே சுண்டெலி கருத்துத் தெரிவித்தது. அதன் விளைவை நன்றாகவே அனுபவித்தது. வந்தோமா, விளையாடினோமா, போனோமா என்றிராமல், எல்லோரும் பேட்டி கொடுக்கிறார்கள் - நாமும் பேட்டி கொடுப்போம் என்று பேட்டி கொடுக்கப்போய், சிம்பாப்வே பட்டபாடு போதும் என்று நினைக்கிறோம்.

அடுத்து 14 ஆம் திகதி இந்தியா - சிம்பாப்வே அணிகள் மோதின. இந்தப் போட்டியில் சிம்பாப்வே அணி சிறிது சிறப்பாகவே விளையாடியது என்றே சொல்லலாம். ஏனெனில், அவர்கள் பெற்ற ஓட்டம் 208. அந்தப் போட்டியிலும் 200 இற்குள் சுருண்டிருக்கும். ஆனால், அவுஸ்திரேலிய அணி வீரர்களை வயதானவர்கள் என்று சொல்லிய சிம்பாப்வே "இளம்வீரர்" ஹீத் ஸ்ரீக் சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை 200 ஐத் தாண்டச் செய்தார்.



ஹீத் ஸ்ரீக்

அரச பதவியாவது கிடைக்குமா

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 37.4 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. அதில் என்னவோ இந்திய அணி அபார வெற்றி பெற்றதுதான். ஆனால், அதில் மனதை நெருடிய விடயம் 10 ஓட்டங்களால் சேவாக் சதத்தைத் தவறவிட்டதும், 6 ஓட்டங்களால் சச்சின் அரைசசதத்தை நழுவவிட்டத்தும் - ரசிகர்கள் மனதை நெருக்கொண்டிருக்கின்றன.

வீரேந்தர் சேவாக் தற்போது ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக, பலமான அடித்தளத்தை அணிக்கு இட்டுக் கொடுப்பதுடன், ஐந்தாவது பந்துவீச்சாளராகச் சிறப்பாகப் பந்துவீசியும் விளையாடி வருகிறார்.

16 ஆம் திகதி நடைபெற்ற அவுஸ்திரேலிய - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான போட்டியில், சிம்பாப்வே நன்றாக வாங்கிக்கட்டியது.


ரிக்கிபொண்டிங் சக்கரவர்த்தி

நாணயற்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி- சிம்பாப்வேயை ஒருவாங்கு வாஙகிவிட்டது. அதிலும் அடம் கில்கிறிஸ்ட் 126 பந்துகளில் பெற்ற 172 ஓட்டங்கள் - நாம் வயதானாலும் சிங்கம் சிங்கமே என்று நிரூபித்துவிட்டார். ஒரு நிலையில் சையிட் அன்வரின் 194 ஓட்ட ஒரு நாள் போட்டிச் சாதனையை கில்கிறிஸ்ட் முறியடிப்பார் என எண்ணியிருந்தபோது, துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்தார். பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே அணி, 196 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

ஆனாலும், அதில் ஒரு சிறப்புத்தன்மை- அணிக்குள் மிகவும் வயது குறைந்த வீரரான ரைபூவும், அணிதலைவர் ஹீத் ஸ்ரீக்கும் அணியின் படுதோல்வியைத் தவிர்த்தார்கள். ஹீத் ஸ்ரீக் தொடர்ந்தும் சிறப்பாக விளையாடி, தான சகலதுறை வீரர் என்பதை நிரூபித்து வருகிறார். இந்திய அணியின் இந்த சுற்றுப் போட்டி முடிவடைந்ததும், மார்ச் ஏழாம் திகதி பாகிஸ்தானுடன் மூன்று டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளிலும், பங்களாதேஷுடன் இரண்டு டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டியிலும், இங்கிலாந்துடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டியிலும், இங்கிலாந்தில் நடைபெறும் மினி உலகக்கிண்ணக் கோப்பை போட்டியிலும் விளையாடவுள்ளது. இனித் தொடர்ந்து கிரிக்கெட் திருவிழாதான். நடைபெற்றுக்கொண்டிருக்கும் போட்டித்தொடரின் 2 போட்டிகளை மட்டுமே பலாலியில் இயங்கும் **ESPN STAR SPORTS** மீள் ஒளிபரப்பு நிலையம் ஒளிபரப்பியது. ஆயிரக்கணக்கான ரசிகர்கள் பலத்த சந்தோஷத்துடன் அடுத்த போட்டிகளும் ஒளிப்பரப்பாகும் என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், அவர்கள் ஏதோ காரணததால் தொடர்ந்து ஒளிபரப்புவதை நிறுத்திவிட்டார்கள். பல ரசிகர்களின் வேண்டுகோள் தற்போது நடைபெறும் போட்டித் தொடரையும், இனிமேல் நடக்கவிருக்கும் போட்டிகளையும் பலாலி ஒளிபரப்பு சேவையினர் ஒளிபரப்பவேண்டும் என்பதுதான். அவர்கள் நிச்சயம் செய்வார்கள் என்று நம்புவோம். மாணவ ரசிகர்கள் கல்வியைப் பாழாக்காமல் கிரிக்கெட் போட்டிகளை ரசிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள். **- மாயவன்**

## தெற்குத் திசையினிலே... - கொழும்பிலிருந்து இந்திரஜித்

# அரசியல் முறுகல் நிலைக்கு மத்தியில் அடுத்த தேர்தலுக்கான ஏற்பாடுகள்...

**தே**ர்தல் வருடம் ஆரம்பமாகிவிட்டது. அனைத்துக் கட்சிகளுமே தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட ஆரம்பித்துவிட்டன. ஆளும் ஐக்கிய தேசியமுன்னணி பாரிய பிளவுகள் இன்றிக் கடந்த இரண்டு வருடம் தப்பிப் பிழைத்த நிலையில் மீண்டும் தேர்தலைச் சந்திக்கிறது. ஜனாதிபதியின் கட்சியைப் பொறுத்தவரை- வலுவிழந்த இடதுசாரியான மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து தமக்கு வலுச் சேர்க்க முனைந்துள்ளது.

நாட்டின் இனப்பிரச்சினைத்தீர்வு, மக்கள் மீளக்குடியேற்றம், அடிப்படை வசதிகள் உள்ளிட்ட அனைத்துக் கோரிக்கைகளும்- இந்த வருடத்தின் முதல் 6 மாத காலப் பகுதிகளில் வெறும் கோரிக்கைளாகவே மாத்திரம் இருக்கப்போகின்றன. ஆனால், அந்தக் கோரிக்கைகளால், ஒவ்வொரு தேர்தல் பிரசார மேடைகளிலும் கிடைக்கும் உறுதிமொழிகள் நிரம்பி வழியப்போகின்றன.



நாடு 2001 ஆம் ஆண்டு சந்தித்த பொதுத் தேர்தலைக் காட்டிலும், தற்சமயம் சந்திக்கப் போகும் தேர்தல் வித்தியாசமானது. 2001 இல் போர் ஒன்று ஓயப்போகின்றது என்ற நம்பிக்கையில் - மக்கள் தமது வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கினர். ஆனால், இன்று அந்தப் போர் ஓய்வை முன்கொண்டுசெல்லக்கூடிய வலு யாருக்கு உண்டு என்பதைக் கணிக்கும் பொறுப்பு மக்களிடம் விடப்பட்டிருக்கிறது.

மாகாணசபைத் தேர்தலாக இருந்தால் என்ன? பொதுத் தேர்தலாக இருந்தால் என்ன? இரண்டுமே கட்சிகளின் செல்வாக்கு மக்கள் மத்தியில் வியாபித்திருக்கும் வீதத்தைக் காட்டப்போகின்றன. ஜனநாயக நாடொன்றில் பொதுத் தேர்தல் என்பது 5 வருடம் அல்லது 6 வருட காலப்பகுதியில் நடைபெறுகின்றன. அதற்குள் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் நாட்டைக் கட்டியெழுப்பி, தமது செல்வாக்கை மக்கள் மத்தியில் ஸ்திரப்படுத்திக்கொள்கின்றன. குறிப்பிட்ட அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் நாட்டின் எதிர்காலத்துக்கு நன்மை பயக்குமானால், எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குகின்றன. ஆயினும், இலங்கையைப் பொறுத்தவரை இதில் மறுபக்கமே இடம்பெற்றுவருகின்றன.

ஒரு அரசாங்கம், என்று ஆட்சியில் அமர்கிறதோ அன்று முதல் - எதிர்க்கட்சி குறிப்பிட்ட அரசாங்கத்தை எப்போது பதவியில் இருந்து அகற்றலாம் என்ற அடிப்படையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துவிடும். 2000 ஆம் ஆண்டுமுதல் இவ்வாறான ஒரு நிலையே இலங்கையில் நிலவுகிறது. பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் நாட்டின் நலனைக் கருத்திற்கொள்ளாது, கட்சி நலனையே முதன்மைப்படுத்தி வந்துள்ளன.

2000 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் - இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதியின் நகல், நாடாளுமன்றத்தில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியினரால் எரியூட்டப்பட்டதும், போர் வரலாற்றில் அதிகமான காலம் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்ட இந்தக் காலகட்டத்தில், ஜனாதிபதியால் அரசாங்கத்தின் மூன்று அமைச்சுக்கள் பொறுப்பேற்கப்பட்டதும், ஒரே விதமான நடவடிக்கைகளேயாகும்.

நாட்டின் இறைமை பாதிக்கப்படுகின்றது. நாடு பாதாள வீழ்ச்சிக்குச் சென்றுகொண்டிருக்கிறது என்றெல்லாம் - பரஸ்பர குற்றச்சாட்டைச் சுமத்திக்கொண்டிருக்கும் இரண்டு பிரதான கட்சிகளும், நாட்டின் இறைமைக்கு எதைச் செய்தன. இரண்டு கட்சிகளுமே நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படும் வகையிலேயே நடந்துகொள்கின்றன.

சொந்தக் காலில் நிற்கவேண்டும். இலங்கை இனப்பிரச்சினை - உள்நாட்டுப் பிரச்சினை. அதனை நாமே தீர்த்துக் கொள்வோம் என்ற உண்மை நிலைப்பாடு இந்த இரண்டு கட்சிகளிடமும் இல்லை. பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்வுப் பொதியை அறிமுகம் செய்தபோது, ஐக்கிய தேசியக் கட்சி இந்தியாவின் உதவியை நாடியது, இன்று அதே இந்தியாவை பொதுஜன ஐக்கிய முன்னணி நாடி நிற்கின்றது. இங்கு எப்படி நாட்டின் இறைமை பாதுகாக்கப்படும்?

ஒரு காலத்தில் - இலங்கை இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதில் வெளிநாடுகளின் தலையீடுகள் அவசியமில்லை என சிங்களத் தலைமைகள் கூறிவந்தன. ஆனால், இன்று - இந்தப் பிரச்சினை சர்வதேசப் பிரச்சினையின் ஒரு அங்கமாக விளங்குகிறது. இலங்கையின் இனப்பிரச்சினையில் பொதுவாக எல்லா முன்னணி நாடுகளுமே தலையீடு கொண்டுள்ளன.

இலங்கையின் இறைமையை விற்று, ஏனைய நாடுகள் மீண்டும் இறைமையை ஏற்படுத்தவேண்டும் என்பதே இன்றைய சூழ்நிலையாகும். இதற்குள் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் முறுகல், தற்சமயம் இலங்கையின் பிரச்சினையில் தலையீட்டைக் கொண்டுள்ள நாடுகளுக்கு மேலும் உற்சாகத்தை அதிகரித்துள்ளது. அதாவது, பிரச்சினைகள் அதிகரித்துச் செல்லும் போக்கில் நாட்டில் தலையீட்டை மேற்கொள்ளும் நாடுகளின் பொறுப்புக்களும் அதிகரித்துள்ளன. எனவே, அவை தமது நலன்கருதிய செயற்பாட்டுக்காக இலங்கையில் நீண்டகாலம் தங்கியிருக்கும் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளன.

தற்சமயம், தீர்க்கமுடியாத பிரச்சினைகளில் முதன்மை வகிக்கும் ஜனாதி பதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அதிகாரப்போட்டி எவ்வாறு தீர்க்கப்படப்போகின்றது என்பதே பிரதான கேள்வியாக எழுந்துள்ளது.

இலங்கையின் அரசியலமைப்புக்குள் இருந்துகொண்டு - பிரச்சினை யாவும் அணுகப்படுவதால், அதிலிருக்கும் சிக்கல் நிலையைத் தீர்ப்பதில் பாரிய தடைகள் ஏற்பட்டுள்ளன.

அஸ்கிரிய மகாநாயக்கரின் கருத்தின்படி- ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமை சமாதான நகர்வில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், அவர் அரசியலமைப்பின் அடிப்படையிலேயே தமது முடிவை எடுத்திருப்பதால், அதனைச் சட்ட விரோதம் எனக்கூறமுடியாது. இதற்கு மாற்றுவழி - உடனடியாக அரசியலமைப்பை மாற்றமுடியாது என்பதால், ஜனாதிபதியும் பிரதம மந்திரியும் நாட்டின் நலன்கருதி இணக்கம் ஏற்படுத்துவது மாத்திரமே சரியானது என மகாநாயக்கர் கூறுகின்றார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முறுகலுக்கு இணக்கத்தை ஏற்ப டுத்த முயற்சித்து, முதல் கட்டமாக மனோதித்தவெல மற்றும் மலிக் விக்கிரம ஆகியோர் தோல்வியையே சந்தித்துள்ளனர். தற்சமயம் அவர்கள் இரண்டாம் கட்ட முயற்சியை ஆரம்பிக்கப் போகிறார்கள். இந்த முயற்சி எவ்வளவு தூரம் நன்மை பயக்கும் என்பதைப் பலரும் கேள்வியோடு நோக்குகின்றனர்.

ஆனால், ஜனாதிபதியும் பிரதமரும் இணங்கிச்செல்வதைத் தவிர வேறு வழியில்லை என வர்த்தக சமூகம் கூறுகிறது. இந்த வர்த்தக சமூகம் இலங்கை அரசியலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தலாம்?

தனியார் மயத்தின் முழுமைக் கட்டத்தை இலங்கை அண்மித்துக்கொண்டிருக்கிறது. எனவே, இன்று நாட்டின் பொருளாதாரத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் வர்த்தக சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். இந்தநிலையில் நாட்டுத் தலைவர்கள் இவர்களின் கருத்துக்குச் செவிசாய்த்தே ஆக வேண்டும்.

வர்த்தக சமூகத்தின் கருத்தின்படி நாட்டில் தற்சமயம் எழுந்திருக்கும் பிரச்சினைக்குப் பொதுத் தேர்தல் தீர்வாக அமையாது. ஜனாதிபதியும் பிரதமரும் இணக்கப் பாட்டுடன் செயற்படுவதன் மூலமே, பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என வலியுறுத்துகின்றனர்.

தற்சமயம் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால், மீண்டும் ஒருமுறை தொங்கு நாடாளுமன்றத் தன்மையே உருவாகும். இதற்காக நாடு இன்று இருக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில், பொதுத் தேர்தல் ஒன்று அவசியமில்லை என அவர்கள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வலியுறுத்தி வருகின்றனர்.

இறுதியாக இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் - வர்த்தக சமூகம், சிவில் சமூகத்துடன் இணைந்து - ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முறுகலுக்குத் தீர்வைக் காணும் வகையில் தாமே ஆலோசனைகளை முன்வைக்கப் போவதாகக் கூறியுள்ளனர்.

இதற்குள் ஐக்கிய விடுதலை முன்னணி என்றபெயரில் எதிர்வரும் 20 ஆம் திகதி உருவாகவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டிணைவு - பொதுத் தேர்தலை மையமாகக்கொண்டே உருவாக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியைக் காட்டிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கே இந்தக் கூட்டமைப்பில் அதிக அக்கறை காணப்பட்டது. ஏனெனில், தாம் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு இந்த உபாயம் மாத்திரமே தமக்கு வழிகோலும் என அந்தக் கட்சி எண்ணுகிறது.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி, பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறும் வேளையில் மாத்திரமே, சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டிணைவு ஏற்படுத்திக் கொள்ளப்படும் எனக்கூறும் நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டமைப்புக்கு இணங்கியுள்ளது எதனைக் காட்டுகிறது?

அடுத்து வரப்போவது மாகாணசபைத் தேர்தலா? அல்லது பொதுத் தேர்தலா?

அரசியலமைப்பின்படி அடுத்து நடைபெற வேண்டிய மாகாணசபைத் தேர்தலை ஜனாதிபதியால் ஒத்திவைக்கமுடியாது. ஆனால், நாட்டின் அவசியம் கருதி பொதுத் தேர்தல் ஒன்று அவசியம் என அவர் உணர்ந்தால், குறிப்பிட்ட மாகாணசபைத் தேர்தலைப் பின்தள்ளிவைக்க அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜனாதிபதி, வடமேல் மாகாண சபையின் ஆயுட்காலம் எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் வாரப்பகுதியில் முடிவடைவதற்கு முன்னர், பொதுத் தேர்தல் ஒன்றுக்கான அறிவிப்பை விடுக்கமுடியும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக, பொதுத் தேர்தல் ஒன்றைப் பல கட்சிகள் எதிர்பார்க்கின்றன. நாட்டில் பாரிய செலவுக்கு இது வழிவகுத்துவிடும் என அந்தக் கட்சிகள் கூறுகின்றன.

சிஹல உறுமயவைப் பொறுத்தவரையில்- பொதுத் தேர்தல் மாத்திரமே அரசியல் முறுகலைத் தீர்த்து, ஒரேநேரத்தில் ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்பட்டால் மாத்திரமே, அரசியல் முறுகல் நிலைக்குத் தீர்வைக் காணக் கூடியதாக இருக்கும் எனக்கூறுகிறது.

அத்துடன் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால், அது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே வாய்ப்பாக அமைந்துவிடும் என அந்தக் கட்சி தெரிவித்திருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி தாம் எந்தவொரு தேர்தலையும் சந்திக்கத் தயாரெனக் கூறுகிறது.

இடதுசாரிக் கட்சிகள் இன்னும் தேர்தல் தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தவில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரையில் - அது எந்தவொரு தேர்தலுக்கும் தயாரென்ற கொள்கையைக் கொண்டுள்ளது.

மலையக கட்சிகள் தொடர்ந்தும் ஒற்றுமையின்றி மீண்டும் ஒருமுறை பேரம்பேசும் சக்தியில்லாமல், பிரதான கட்சிகளுடனேயே இணைந்து தேர்தல் களத்தில் இறங்கவுள்ளன. இந்த நிலையில் - அவற்றிற்கு, எந்தவொரு தேர்தலையும் நடத்தவேண்டாம் என்று கூறுவதற்குப் போதிய வலுவும் இல்லை என்பதே உண்மை நிலைப்பாடு. ☆

---

## ஒரு நிமிடம் சிந்திப்போம்...

வன்முறையற்ற சூழலை உருவாக்க மனித வர்க்கம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். சமாதானமும் சாந்தியும் நீதியும் - அகிம்சை முறையாலேயே உருவாக்கப்படமுடியும்.

தனிமனித சமூக முரண்பாடுகளும் கருத்து மோதல்களும் மனித இனத்திடம் உருவாகும். இதனைத் தவிர்க்கமுடியாது. எந்த மனிதன் இவற்றுக்கு வன்முறை மூலம் தீர்வுகாண முற்படுகின்றானோ, அவன் சமூக அநீதிகளை வளர்க்கின்றான். வன்முறைக்கு வன்முறைதான் தீர்வு என்பது தவறு. மாற்றுவழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். அதுதான் அன்பு வழி. அதுதான் மேலும் தீமைகளை வளர்க்காது. நல்லதொரு சமூகத்தை உருவாக்கக்கூடியது.

தனிமனித வாழ்வானாலும், சமூக வாழ்வானாலும் முரண்பாடுகளைத் தகுந்த முறையில் எதிர்கொள்ளத் தெரிந்திருக்கவேண்டும். எம்முடன் மற்றவர் முரண்பட்டுக்கொண்டார் என்பதற்காக, அவரது தனித்துவங்களைப் பாதிக்கும் வகையிலும், அவர் சார்ந்தவர்களைப் பாதிக்கும் வகையிலும் செயற்படக் கூடாது.

ஒருவரிடம் பிரச்சினைப்படுகின்றபோது, அதனைச் சுமூகமான முறையில் தீர்க்கமுற்படாவிட்டால், அந்தப் பிரச்சினை பெருகி ஒரு சமூகத்தினைக் குழப்பும் அளவிற்கு விஸ்வரூபம் எடுக்கின்றது.

எமக்கு எதிராக முரண்பட்டு வன்முறைகளைக் கையாளும் நபருக்கு, மீளவும் நாம் வன்முறைகளைக் கையாண்டு பாதிப்புக்களை ஏற்படுத்தச் சிந்திக்காது, அவரை எப்படி நல்ல நிலைக்கு மன்னித்து மனிதராக மாற்றலாம் என்று சிந்திக்கவேண்டும். இவ்வாறு சிந்திக்காவிட்டால், வன்முறையாளர்களைப் பெருக்கிக்கொள்வோமே தவிர நல்ல மனிதர்களை உருவாக்கிக்கொள்ளமுடியாது.

"இன்றைய நெருக்கடியான அரசியல், அறநெறிப் பிரச்சினைகளுக்கு மாற்றுவழி அகிம்சையே. அதாவது, அடக்குமுறை வன்முறையற்ற மாற்றுவழிகளிலேயே அடக்குமுறையையும் வன்முறையையும் எதிர்கொள்ளவேண்டும். மானிட சிக்கல்களைத் தீர்க்க பழியுணர்வு, பகைமை, பதிலடி போன்றவற்றைத் தவிர்த்து மாற்றுமுறைகளை மனிதன் உருவாக்கவேண்டும். இத்தகைய மாற்றுமுறைக்கு அடித்தளம் அன்பே ஆகும்" என்றார் மார்ட்டின் லூதர் கிங்.

மனித வரலாற்றை மீள் பார்வை செய்கின்றபோது வன்முறைச் சூழலால் ஏற்பட்ட பாதிப்புக்கள் சொல்லமுடியாத துன்பியல் நிகழ்வாகவே அமைந்திருக்கின்றன.

தனிமனிதன்கூட தனக்குள்ளே முரண்படுகின்றபோது பழியுணர்வினைக் கையாளவதினால் எந்த மாதிரியான ஆரோக்கியமான முறையிலும் வாழ்வியலை நகர்த்த முடியாது. அவன் தனக்குள்ளே அன்புள்ளத்தை வளர்க்கவேண்டும். அப்போதே தன்னம்பிக்கை வளரும்.

தனிமனிதன் தனக்குள்ளே பழியுணர்வினையும் பகைமையையும் வளர்த்துக் கொள்வதினாலேயே மற்றவர்களை ஏற்றுக்கொள்ளாது வன்முறையைக் கையாளுகின்றான்.

சமூக புலத்தில் வன்முறையாளர்களாக இருப்பவர்கள் ஒரு உள ஆரோக்கியமற்றவர்களே. அவர்கள் தம்மைச் சீர்செய்துகொள்ள அழைக்கப்படுகின்றார்கள். அவர்களை சீர்படுத்த ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். மாறாக அவர்களைப் புறந்தள்ளி வன்முறையைக் கையாண்டு தீர்வுகாணமுயலும்போது சமூகத்தில் வன்முறை பெருகி புதிய வன்முறையாளர்களை உருவாக்குமே தவிர, அன்புள்ளங்களை உருவாக்க முடியாது போய்விடும். சிந்திப்போம் செயற்படுவோம்.

- யாழ். ராதவல்லி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா*
*மன்னவன் கோல்கீழ்ப் படின்*

-திருக்குறள்.

# நமது நோக்கு

## ஜனநாயகத்திற்கான சர்வாதிகாரம்!?

சிறிலங்காவில் நிரந்தரமாகவே ஜனநாயகம் என்ற போர்வையில் ஒரு சர்வாதிகார ஆட்சி உருவாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கான காரணிகளையும் தற்போது நடைபெற்றுவரும் நிகழ்வுகளையும் ஆழமாக நோக்குகையில், ஒரு அரசியல் ரீதியிலான சதி ஒன்றுக்கான திட்டம் ஒன்றை சட்டத்தின் அனுசரணையுடன் ஆனாலும், ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் மேற்கொள்வதற்கான சூழல் ஒன்றை உருவாக்கும் பூலோபாயத்துடன் ஜனாதிபதி இயங்கிவருகிறாரா என்ற சந்தேகம் ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகியுள்ளது.

1994 இல் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையானது ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடையூறானதென்றும், தான் பதவிக்கு வந்தால் அத்தகைய ஆட்சிமுறையை உடனடியாக முற்றாக நீக்கி, மீண்டும் நாடாளுமன்றத்திற்கே அதிகாரங்களை வழங்கும் ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கேற்ப அரசியல் யாப்பை மாற்றுவேன் என்றும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பேன் என்றும் சூளுரைத்துக்கொண்டு, அரசியல் யாப்பினை மாற்றவல்ல அதிகார பலத்தோடு ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி சந்திரிகா- அவர் சொன்ன எதையும் செய்ததில்லை, அளித்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றியதுமில்லை.

மாறாக ஜனாதிபதிப் பதவியை இறுக்கமாகவே பற்றிக்கொண்டு அதனைப் பாதுகாக்க சகலவிதமான அதிகாரங்களையும் பயன்படுத்திக்கொண்டு சமாதானத்தை ஏற்படுத்த மக்கள் அளித்த ஆணையைப் புறக்கணித்து போரைத் தீவிரமாக்கி நாட்டின் இன்றைய சகல அவலங்களுக்கும் பொறுப்பானவரானது தெரிந்த வரலாறே.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்ற முன்னாள் ஜனாதிபதியை தமிழ் மக்கள் மறந்து விடமாட்டார்கள். அவர் எத்தனையோ அரசியல் உள்நோக்கங்களுடன் உருவாக்கிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை கைமாறிக் கைமாறி சந்திரிகாவிடம் போய்ச்சேரும் என்றோ, அது பின்னர் தனது கட்சிக்கு தீராத்தலைவலியாக மாறும் என்றோ கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்.

சந்திரிகா பதவிக்கு வந்தது எல்லோரையும் போன்று தன்னை ஒரு கண்ணியமான அரசியல்வாதியாக காட்டிக்கொள்ள மேற்கொண்ட வேடங்கள் சில மாதங்களிலே கலைந்துபோனபோது, அவரது பாரம்பரிய அதிகார அகங்கார குணாம்சம் வெளிப்படத் தொடங்கியபோது - அவரின் ஆழ்மனக் கிடக்கைகள் இனங்காணப்படத் தொடங்கியது. அவர் கொண்ட போர்க்கோலம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியை நிரந்தரமாக தக்கவைத்துக்கொள்ள, 'நாட்டின் பாதுகாப்பு' என்ற பதத்தைப் பயன்படுத்தி அவர் மேற்கொள்ளத் திட்டமிட்ட அரசியல் ராஜதந்திர பூலோபாயச்சதி ஒன்றின் நகர்வுதான் என்பதை புரிந்துகொள்ள சில ஆண்டுகள் பிடித்தன.

'சமாதானத்திற்கான யுத்தம்' என்ற அவரின் கோட்பாடு, அதிகாரப் பதவியை தக்கவைத்துக்கொள்ள அவர் கையாண்ட யுக்தியின் அடிப்படையிலான ஒன்றேயாகும். ஆனால், தென்பகுதி மக்களே அவரின் அதிகார போதையின் செயற்பாடுகளைப் புரிந்துகொண்டு கடந்த பொதுத் தேர்தலில் அவரது தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியை நிராகரித்து, ரணில் வசம் ஆட்சிப்பொறுப்பை வழங்கியபோதே, அவர் ஒரு கண்ணியமான அரசியல்வாதியாக இருந்தால் பதவி துறந்திருக்க வேண்டும்.

ஆனால், அவர் அதைச் செய்யவில்லை.

அவருக்குத் தெரியும் நாடாளுமன்றத்தை ஆட்டிப்படைக்கும் அதிகார பலம் தன்வசம் இருக்கின்றதென்று... அதைவைத்தே ரணிலின் ஆட்சிக்கு ஆப்பு வைக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியும் என நம்பிய அவர், அதற்கான காலத்தை இப்போது தேர்வு செய்துள்ளார் என்றே கூறவேண்டும்.

இன்றைய அரசியல் நெருக்கடிகள் அதன் பிரதிபலிப்பேயாகும். அண்மையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள சந்திரிகாவின் இரண்டாவது பதவிப் பிரமாண விவகாரம் மேலும் புதிய அதிர்ச்சியை நேற்று முன்தினம் ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, ஜனாதிபதி சந்திரிகா இரு தடவைகள் பதவிப் பிரமாணம் செய்ததன் மூலம் 12 வருடங்கள் அப்பதவியை தொடர்ச்சியாக வகிக்கலாம் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளமையானது, சட்டத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் யுக்தியின் அடிப்படையிலானது எனக் கருதுவதற்கு இடமளித்துள்ளது என நோக்கர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதனடிப்படையில் பார்த்தால் சட்டத்தையும், நீதிமன்றத்தையும் காரணம்காட்டி தனது அபிலாஷைகளுக்கேற்ப அதிகாரத்தை பயன்படுத்த சந்திரிகா முனைகின்றார் என்பதற்கு அண்மைக்கால அவரின் அதிரடி நடவடிக்கைகளே சான்றாகும்.

இதற்கு அவர் முன்னர் போரை, சமாதானத்திற்கான யுத்தம் என்று வர்ணித்ததுபோல, இதனை ஜனநாயகத்திற்கான சர்வாதிகாரம் என்றும் கூறலாம்தானே?

# நாடும் நடப்பும்




# வவுனியாவில் அமைக்கப்பட்ட விழிப்புக்குழு தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது

### நீதிமன்றில் முறைப்பாடு

வவுனியாவில் அமைக்கப்பட்ட விழிப்புக்குழுக்கள் - தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

வவுனியாவில் அதிகரித்துவந்த வன்முறை, கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காகவே, இந்த விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இந்த அமைப்புக்கள் தவறான முறையில் நடந்துகொள்வதாக வவுனியா நீதிமன்றத்தில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த செயல்களை உடன் நிறுத்தவேண்டும். இல்லையேல் சந்தேகநபர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் தெரிவித்தார்.

கிராமமட்டத்தில் இடம்பெறுகின்ற கொள்ளைச்செயல்களைக் கட்டுப்படுத்தவெனக் கடந்த மாதம் நீதிவான் முன்னிலையில் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்பின்னர், கிராமசேவகர்களின் ஊடாக விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

சில கிராமசேவகர்களின் உதவியுடன் இந்த விழிப்புக் குழுவிலிருக்கும் பலர் - பணம் பெற்றுவருவதாகத் தனக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக வவுனியா நீதிவான் கூறியுள்ளார்.

### கிறிஸ்தவ ஆலயங்கள் தாக்கப்பட்டமை

# மனிதஉரிமை ஆணைக்குழுவினால் தனிநபர் விசாரணைக்குழு அமைப்பு

கிறிஸ்தவ ஆலயங்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தனிநபர் விசாரணைக்குழுவொன்றை அமைத்துள்ளது.

இந்த ஆணைக்குழு - குருநாகல மாவட்டத்தில் தற்போது கடமைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்தக் குழு - தேவாலயங்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்திவருகின்றது. இதன் அடிப்படையில் நாடுமுழுவதும் இந்த தனிநபர் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு, அதன் கருத்துக்களை கிறிஸ்தவ விவகாரங்களுக்குப் பொறுப்பானவர்களிடமும், மனித உரிமை ஆணைககுழுவிடமும் சமர்ப்பித்துள்ளது.

இந்த விசாரணைகள் முடிவடைந்த பின்னர், விசேட அறிக்கைகள் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (01)

## கற்பகவிநாயகர் அபிவிருத்திக்கழக சைவசமய அறிவுப்போட்டி

சாந்தையர்மடம் கற்பக விநாயகர் சைவசமய அபிவிருத்திக்கழகம் வருடா வருடம் நடத்தும் சைவசமய அறிவுப்போட்டி, இந்தவருடமும் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான விண்ணப்பங்கள் இந்தமாத இறுதியில் கோரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலாம், இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு நீதிநூல் மனனப்போட்டியும், தரம் 3 தொடக்கம் 13 வரை சைவநெறித் தேர்வும், தரம் 9 மாணவர்களுக்கு மட்டும் பண்ணிசைப் போட்டியும், 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் சைவசமய பொது அறிவுப் போட்டியும் நடத்தப்படவுள்ளது. அத்துடன், விசேட போட்டிகளாக நாடகம், புராணபடனம், கதாப்பிரசங்கம், தொண்டுபடும் செயன்முறைப்போட்டிகளும் நடைபெறுமெனவும் பரீட்சை செயலாளர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (101)

## ஒஸ்மானியா பாடசாலை சுற்றாடலில் சிரமதானம்

யாழ். முஸ்லிம் வட்டார மக்களுடன் நல்லுறவை ஏற்படுத்தவும், கல்விசார் முன்னெடுப்புக்கான பங்களிப்பைத் தூண்டவும் - கியூடெக் சமாதான ஊக்குவிப்புக் குழுவினர் - ஒஸ்மானியா பாடசாலைச் சுற்றாடலைச் சிரமதானம்மூலம் துப்பரவு செய்யவுள்ளனர்.

அத்துடன், மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்காக ஒஸ்மானியா கல்லூரியில் சிறிய நூலகம் ஒன்றையும் கியூடெக் நிறுவனத்தினர் ஆரம்பிக்கவுள்ளனர்.

முஸ்லிம் மக்களுடனான நல்லுறவை மேம்படுத்துவதிலும், கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும் கிராம உயிர்ப்பூட்டல் சமாதானக் குழுவினர் - 100 பேர்வரை பங்கேற்று நடத்தும் சிரமதானப் பணியும், ஒன்றுகூடலும் இன்று காலை 9.30 மணிமுதல் மாலை 3 மணிவரை நடைபெறவுள்ளது.

### திலங்க சுமதிபால விடுதலை

# குற்றப்புலனாய்வுத் துறையினர் சிலரிடம் நீதிச்சேவை ஆணைக்குழு வாக்குமூலம்!

(கொழும்பு)

பூரணை தினத்தன்று இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் திலங்க சுமதிபாலவை விடுதலை செய்தது தொடர்பாக, குற்றப்புலனாய்வுத் துறையினர் சிலரின் மீது நீதிமன்ற ஆணைக்குழு வாக்கு மூலத்தினை பெறவுள்ளது.

ஏற்கனவே ஆனந்த கம்லத் ஆராய்ச்சி என்ற நீதிவான் இது தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவால் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்.

அன்றைய வழக்கில் முறைப்பாட்டாளர்களாக இருந்த குற்றப்புலனாய்வுத் துறையினரை விசாரணைக்குட்படுத்தி, வாக்கு மூலங்களைப் பெறுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

ஏற்கனவே கொழும்பு மாவட்டத்தின் பிரதான நீதிவான் ஏ.ஆர் செய்யன்துரு என்பவரின் வாக்குமூலம் பெறப்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் காலப்பகுதியில் ஆனந்த கம்லத் ஆராய்ச்சி மீது குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்படும் என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

# உங்களின் புத்தாண்டு யோகம் எப்படி?



## மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் கால்கள்)*

நற்குணமும் சுயகௌரவமும் உடைய மிதுனராசி நேயர்களே!

இந்த ஆண்டில் உங்களுக்கு மனோதிடத்தையும், நற்பலனையும் தரும்படி இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். ஜென்மத்துச் சனியால் மனம், பணம், புகழ் என்பவற்றில் இடையூறு ஏற்படாமலிருக்கவேண்டும். எனவே, நீங்கள் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறீர்கள். காலத்தின் கோலத்தை நினைத்து கர்ச்சித்துடனும், அவதானத்துடனும் நடந்து கொள்ளுங்கள். முதல் மூன்று மாதங்கள் சிரமத்தைத் தரக்கூடியது. நீங்கள் யாருக்காகப் பாடுபட்டீர்களோ, அவர்களே உங்களைத் தூக்கி எறிந்துவிடுவார்கள். குடும்பத்தில்கூட உங்களுக்கு மதிப்புக்கொடுத்து நடக்கமாட்டார்கள். எனவே, இறைநம்பிக்கையுடன், இறைவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, நடப்பதெல்லாம் நன்மைக்கே என்ற சிந்தனையுடன் செயற்படுங்கள். வீண் ஆடம்பரச்செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். வேலைப்பளு அதிகமிருக்கும். மனதில் சுமையும் ஏறிக்கொண்டிருக்கும். ஆவணி மாதத்தின் பின் சனி, வீயான மாறினாலும், அதிக முன்னேற்றம் இருக்காது. எனினும் முன்பிருந்ததிலும் பார்க்க சற்று முன்னேற்றம் காணலாம். பொருளாதாரம், வருவாய் சிறப்படையும். வருட ஆரம்பத்தில் இருந்த கஷ்டங்களை நினைத்துப் பிற்பகுதியைக் கவனமாகக் கழிக்கவும். நீங்கள் முயற்சித்துச் சேர்த்த பணத்தை வீணாக விரயம் செய்து, கடனாளியாகாதீர்கள். குடும்பத்தில் நோய்நொடிகளும் ஏற்படக்கூடிய காலம். சிலர் சகோதரம், குடும்பம் ஆகியோரைப் பிரிந்திருக்கவேண்டிவரலாம். குருபகவானைப் பிரார்த்தித்து வழிபடுங்கள். தெய்வ அருளால் எல்லாம் அனுகூலமாகும்.

### பெண்களுக்கு:

அடுத்தவர் மீது விரோத மனப்பான்மை ஏற்படும். மனதை ஒருமைப்படுத்திப் பொறுமையாகப் பணிபுரிந்தால் - குடும்பத்துக்கும், உங்களுக்கும் நன்மையாக இருக்கும். குடும்பச் சுமை கூடுதலாக இருந்தாலும் - கணவன், பிள்ளைகள் ஆதரவாக இருந்து செயற்படுவார்கள். திருமணப்பேச்சுக்கள் எவ்வித முடிவுமின்றி, இழுபறி நிலையாகவே இருக்கும். ஆவணி மாதத்தின்மேல் நன்மை உண்டு.

### தொழிற்துறையினர் - வியாபாரிகள்:

உங்கள் முதலீடுகள் எல்லாம் கிணற்றில் போட்ட மாதிரித்தான். என்ன செய்வதென்று தெரியாமல் திகைப்பீர்கள். வியாபாரத்தைச் செவ்வனே செய்யமுடியாமல் அதிருப்தி கொள்வீர்கள். முடிந்தவரையில் கடமையில் கண்ணாகஇருங்கள். ஆவணி மாதத்தின் முன் எந்தவித முதலீடுகளும் செய்யவேண்டாம்.

### உத்தியோகத்தர்களுக்கு:

அலுவலகத்தில் கட்டுப்பாடு இருக்கவேண்டியிருக்கும். வேலைப்பளுவால் மனவிரக்தி ஏற்படும். உயரதிகாரிகள், சக ஊழியர்கள் எவருமே உங்களுக்குச் சாதகமாக இருக்கமாட்டார்கள். ஆவணி மாதத்தின்மேல் நெருக்கடிகள் சிறிது குறையும். எனினும் இந்தவருடம் சாதகமான பலன்கள் தென்படுவது கடினம்.

### அரசியல்வாதிகளுக்கு:

உங்கள் செயற்திறன்கள் குறையுங்காலம். எதிரிகள் உங்களை வீழ்த்தச் சந்தர்ப்பம் நோக்கிக்கொண்டிருப்பர். மக்களிடம் நன்மதிப்புப் பெறவேண்டுமானால் தொண்டுகளைச் செய்யுங்கள். மக்கள் உங்களைக் கௌரவிப்பார்கள்.

### மாணவர்களுக்கு:

வீட்டில்கூட நீங்கள் படிக்கமுடியாத நிலை ஏற்படலாம். பாடசாலையில் சகமாணவர்கள் உங்களைப் படிக்கமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்துவார்கள். தடைகளை உடைத்து முன்னேறுங்கள். வருட பிற்பகுதியில் பல பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும்.



## கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் கால், பூசம், ஆயிலியம்)*

பெற்றோர்கள் மீது பரிவும், பெரியவர்களிடத்து அன்பும், பிள்ளைகளிடத்து பாசமும் உடையவர்களாக இருப்பீர்கள். பிரயாசைப்பட்டு உழைப்பீர்கள். பலருக்கு உதவுவீர்கள். ஏழரைச்சனி முற்பகுதி நடந்தாலும், குருபகவான் தனஸ்தானத்திலிருந்து கைகொடுப்பான். வெகு சாமர்த்தியமாக எல்லாவற்றையும் கொண்டிழுப்பீர்கள். வருடத்தொடக்கத்தில் உங்களுக்கு எல்லாவழிகளும் திறந்துவிடப்பட்டுள்ளன. நன்மைகளை அள்ளிச்சென்று, பலருக்குப் பயன்படத்தக்கதாக வாழ்வீர்கள். கடன்தொல்லைகள் ஏதும் இருந்தால் அவை விரைவில் நீங்கிவிடும். சிலருக்கு வீடு, காணி வாங்கும் பலன் கிட்டும். பலவகையாலும் உதவிகள் கிட்டும். வீட்டில் சுபநிகழ்வுகள் ஏற்பட இடமுண்டு. சித்திரைமாதம் சூரியன் உச்சம்பெறுவதால், தொழில் சிறப்பாகநடக்கும். சனி ஆவணிமாதம் ஜென்மராசிக்கு வருவதால்- வங்கி, பொருளாதாரம் முதலியவற்றால் பிரச்சினை உண்டாகலாம். சிலருக்கு நீதிமன்ற வழக்குகளும் வரலாம். எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நன்று. வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கிட்டும். சில சந்தர்ப்பங்களில் தேகாரோக்கியம் பாதிப்படையலாம். வைத்தியரின் ஆலோசனைகளை அனுசரிப்பது நன்று. சிலர் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டு. வெளிநாட்டிலிருந்து சுப செய்திகள் வரும். வருடப்பிற்பகுதியில் பல செலவுகள் உங்களை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும். மறைமுக எதிரிகளைப் பற்றி அவதானமாக இருக்கவும். சிலர் வேண்டுமென்றே உங்களைக் கஷ்டத்துக்குள்ளாக்க முயற்சிப்பார்கள்.

### பெண்களுக்கு:

முதல் மூன்று மாதங்கள் திருமணம், பிள்ளைபேறு, வேலைப்பளு, வெளிநாட்டில் வசிக்கும் உறவினர்மூலம் பலவித நன்மைகள் உண்டாகும். சிலருக்குச் சமூகசேவைகளில் தலைமைப் பதவி கிடைக்கலாம். பிற்பகுதியில் புண்ணிய யாத்திரைப்பலன், மகான்களின் தரிசனம் என்பன கிட்டும். பலவகையாலும் நற்பலன் உண்டு.

### வியாபாரிகள் - தொழிற்துறையினர்:

நீங்கள் திட்டமிட்டிருந்த தொழில்களை நடதத்தக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. தொழில்நுட்ப உதவிகள் கிடைக்கும். வியாபாரிகளுக்குப் புதிய தொடர்புகள் வந்துசேரும். புதுத்தொழில் செய்ய, கட்டடங்கள் வாங்க வங்கி உதவிகளும் ஏற்படும்.

### உத்தியோகத்தர்களுக்கு:

அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோர் பல நன்மைகளைப் பெறுவார்கள். வசதியான இடமாற்றங்கள், கௌரவங்கள் கிடைக்கும். தொழில் சம்பந்தமாக வெளியூர் செல்ல நேரிடும். குடும்பத்தினரைப் பிரிந்துசென்றாலும், பல புதிய வாய்ப்புக்கள் வந்துசேரும். அரசாங்கம் மூலம் நன்மைகளும் கிடைக்கும்.

### அரசியல்வாதிகளுக்கு:

உங்களுக்குப் பல திருப்புமுனைகள் வரும். பெரிய பதவிகளும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. பொதுமக்களிடையே நன்மைபெற என்னசெய்யவேண்டுமோ அதைச்செய்யத் தவறக்கூடாது. மக்களின் ஆதரவு உங்களுக்கு உண்டு. கடமைகளைச் செய்யத்தவறினால் பாதிப்புக்கள் கிட்டும்.

### மாணவர்களுக்கு:

கல்விக்குரிய புதன் நன்றாக இருக்கிறார். வாக்கு ஸ்தானத்தில் இருக்கும் குரு பல நன்மைகளைச் செய்வார். விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்விகற்கும் வாய்ப்பும் உண்டு. பலருக்குப் புதிய வேலைவாய்ப்புக்களும்கிட்டும். போட்டிகளிலும் வெற்றி உண்டு.

(தொடரும்.....)

---

## ஆய்வுக் கட்டுரை

# யாழ்ப்பாணக்குடாநாடு பாலைவனமாகுமா? சோலைவனமாகுமா?

*(நேற்றைய தொடர்ச்சி...)*

தகுந்த முறையில் பயன்படுத்தவேண்டும். வெளிநாட்டு, உள்நாட்டு உதவிச் சேவைகளை விருத்திசெய்யப்படவேண்டும்.

சூழல் பாதுகாப்பில் - விருத்திசெய்ய பிரதேசங்களைக் கண்டறிந்து, அந்தப் பிரதேசங்களில் கிடைக்கக்கூடிய மூலவளங்களைச் சூழலுக்கு மாசு ஏற்படாதவகையில் பயன்படுத்தலாம். மாசு அடைதலை ஊக்குவிக்கும் காரணிகளுக்கு மாற்றீடாக அல்லது பிரதியீடான காரணிகளைக் கண்டறிந்து பயன்படுத்தவேண்டும். நிலம், நீர் என்பவற்றின் விருத்தியிலும், பரிபாலனத்திலும் நாம் போதிய கவனம் செலுத்தவேண்டும்.

மக்களுக்குச் சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். உலக சுற்றாடல் தினமோ அல்லது மரம்நடுகை வாரமோ கொண்டாடப்படுவதுடன் நின்றுவிடாமல், தொடர்ந்து சூழல் பாதுகாப்பு நடவடிக்கையில் மக்களை ஆர்வங்கொள்ளச்செய்யவேண்டும். அவர்களைக் கூட்டுமுயற்சிகளில் பங்குபெற வைப்பதுடன், அவர்களின் ஆர்வத்தைத் தூண்டவேண்டும். இன்று ஆரம்பக்கல்வி தொடக்கம் பல்கலைக்கழக கல்விவரை சுற்றாடல் பிரச்சினைகள் சம்பந்தமான போதனைகள் போதிக்கப்பட்டபோதும், அவை ஏட்டுக் கல்வியாகவே இருக்கின்றன. தொடர்புசாதனங்களும் சுற்றாடல் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தபோதும், மக்களிடையே பெரிய மாற்றத்தைத் தூண்டவில்லை. அண்மைக காலங்களில் தென்னிந்திய தமிழ் திரைப்படங்களில் சுற்றாடல் பிரச்சினைகள் கையாளப்பட்டுள்ளன. எது எப்படி இருந்தபோதும், பெரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. ஆயினும், வெளிநாடுகளில் சர்வதேச செஞ்சிலுவை மாதிரி - சர்வதேச பச்சை நிலுவை இயக்கம், கிறீன் டிஸ் இயக்கம் போன்றவை மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறு தென்னிந்தியத் தமிழர் ஒருவர், சர்வதேசச் சுற்றாடல் பாதுகாப்பு தொண்டர் நிறுவனமான - எக்ஸ்நேரா இன்ரர்நஷனல் என்ற அமைப்பைத் தொடக்கி, அமெரிக்காவில் கிளையையும் கொண்டுள்ளது. இலங்கையிலும் அண்மையில் இதன் கிளை அமைக்கப்பட்டது. எனவே, நாமாகவே எமது பிரச்சினைகளை உணர்ந்து, அந்தப் பிரச்சினைகளிலிருந்து விடுபட ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

எமது செயற்திட்டங்கள் சூழல் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுப்பதன்மூலம், பாலைவனமாக மாறுவதை நிறுத்தலாம். சூழல் பாதுகாப்பின் பல அம்சங்களில் ஒன்றுசேர்ந்து செயற்படும்போதுதான், பாலை வனம் சோலை, வனமாகமாறும். அப்படி ஒருகாலம் வரும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. அதுவும் எங்கள் காலத்தில் சோலைவனத்தில் வாழலாம். ஆனால், இது செயற்படுவதற்குக் குடாநாட்டிலுள்ள ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பும், பங்களிப்பும் மிகமிக அவசியமாகும். அது கிடைக்காதவிடத்து இது ஒரு பாலைவனந்தான். எல்லாம் உங்கள் கையில் தங்கியுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாடு பாலைவனமாகுமாயின் - பல ஆயிரக்கணக்கானவரின் உயிர்களையும், பலகோடி சொத்துக்களையும் இழந்ததுடன் ஆயிரக்கணக்கான இளைஞர், யுதவிகளின் போராட்டத்தாலும், உயிர்த்தியாகங்களாலும் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்படும், பாதுகாக்கப்படும் எங்கள் குடாநாடு பெறுமதியற்றதாகிவிடும். எமது மண்ணை மீட்பதற்குப் போராட்டம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவுக்குக் குடாநாடு பாலைவனமாக மாறுவதிலிருந்து பாதுகாப்பதும் முக்கியமாகும்.

போராட்டச் சூழ்நிலையில் - நாம் பொருளாதாரத் தடைகளால் பாதிக்கப்பட்டுள்ளோம். இந்த நிலையில் வாழ்வா? அல்லது சூழல் பாதுகப்பா? அவசியம் என வினா எழுப்புகிறார்கள். வாழ்வும், சூழல் பாதுகாப்பும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே செயற்படுகின்றன.

இன்னும் சிலர் - சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மேற்கொள்ளும்போது, அந்தப் பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றினால், எல்லாமே வீண் செயல்கள் என்று கூறுகிறார்கள். குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரையில் போராட்டமும், சூழல் பாதுகாப்பும் இரு கண்களைப் போன்றவை. எம்மில் பலர் சூழல் பாதுகாப்புக்குப் பங்களிப்பு இன்றி, வாய்ச்சொல் வீரர்களாக இருக்கின்றோம். இது எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் செய்யும் துரோகமாகும். மாலைதீவுகளில் - சில தீவுகள் நீரில் மூழ்கியிருக்கின்றன. அப்பிடியிருந்த போதும்கூட, அங்குள்ள மக்கள் சூழல் பாதுகாப்பில் கவனத்துடன், அக்கறையாகச் செயற்படுகின்றார்கள். நாம் எதிர்கால சந்ததியினருக்காகச் சேர்த்துவைத்திருக்கும் சொத்துக்களோ அல்லது உடமைகளோ அல்லது பணமோ அல்லது கல்விச்செல்வமோ சூழலைப் பாதுகாக்கமாட்டாது. எமது பங்களிப்பின் மூலமே சூழலைப் பாதுகாகவும், மாசு அடையாமல் தடுக்கவும் முடியும். இதன்மூலமே பாலைவனமாக மாறுவதைத் தடுத்துக்கொள்ளலாம்.

சூழல் பாதுகாப்பில நாம் அக்கறைகொள்ளாவிடின் - அதற்கான பலாபலனை அனுபவிக்கநேரிடும். ஒரு இடத்தின் கலாசாரங்களும், நாகரிகங்களும் முற்றாக அழிந்து போனமைக்குச் சூழலைச் சரியானமுறையில் பேணாமையே காரணமாகும். உதாரணமாக- சிந்துவெளி நாகரிகம், எகிப்திய பிரமிட்டுகள் நாகரிகம், அமெரிக்க மாயா நாகரிகம் போன்றன புகழ்பெற்றமை, அழிந்து ஒழிந்தமைக்குச் சூழல் பாதுகாக்கப்படாமையே காரணமாகக் கூறப்படுகின்றது. இந்தநிலை எங்கள் நாகரிகத்துக்கும் வேண்டுமா?

மேலைநாடுகள் தங்களிடம் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இருக்கின்றது என்ற கனவுலக வாழ்க்கையில் - சூழலைப் பாதுகாக்கவும் பராமரிக்கவும் மறந்து, இன்று இளவு காத்த கிளிபோலத் திண்டாடுகிறார்கள்.

இந்தநிலை எங்களுககோ அல்லது எமது சந்ததியினருக்கோ வேண்டாம். உலகத்திலுள்ள பல நாடுகளில் ஏற்பட்ட சூழல் மாசடைதலைப் பாடமாகக்கொண்டு, எமது திட்டமிட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துச் சூழல் பாதுகாப்புக்குப் பங்களிப்பை வழங்குவதன்மூலம், குடாநாடு பாலைவனமாக மாறுவதைத் தடுக்கலாம். நாம் திரும்பத்திரும்ப ஒரே தவறை விடாமல் - குடாநாடு பாலைவனமாக மாறுவதைத் தடுத்தேயாகவேண்டும்.

சூழலைப் பாதுகாப்பதற்கு வெறுமனே இங்கு ஒருமரம் நாட்டுதல், அங்கு ஒரு குளத்தை ஆழமாக்குதல் போன்றவற்றுடன் இந்தப் பிரச்சினை முடிவதில்லை. வாழ்கைப்பொருளாதார அபிவிருத்தி, நாகரிகம் என்பவற்றின் அடிப்படையில் மாற்றங்களைக்கொண்டுவரும், மனித நடவடிக்கையுடன் இந்தப்பிரச்சினை தொடர்புடையது. இது மனித வாழ்வின் ஆதாரத்தையே உலகளாவியரீதயில் அச்சுறுத்தும் சுற்றாடல் பிரச்சினையுடன் தொடர்புடையதாகும். இதை நாம் இலகுவாகக் கூறுவதாயின் - புதிய நூற்றாண்டில், அதாவது கணினியுலகத்தில், நாம் குறைந்த சுற்றாடலில் கூடிய தொகை மக்கள் வாழப்போகிறார்கள்.

குடாநாட்டின் சூழல்பாதுகாப்பை இரண்டு கட்டமாக நோக்கவேண்டும். முதலாம் கட்டம்- பாலைவனமாக மாறுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும். இரண்டாம் கட்டமாக - அதை சோலைவனமாக மாற்றவேண்டும். கைத்தொழில நாடுகளிலுள்ள அமிலமழை, ஓசோன்படலப் பாதிப்பு, அணுக்கதிர் கசிவு, தொழிற்சாலை நச்சுக்கழிவுப் பிரச்சினைகள் எதுவுமே குடாநாட்டில் இல்லாதபடியால் நாம் இலகுவாக மாறுவதைத் தடுத்துநிறுத்திவிடலாம்.

குடாநாடு பாலைவனமாகாமல் பாதுகாப்பதற்கு - அரசாங்கமோ அல்லது மற்றவர்களோ செய்வார்கள் என நம்பியிருந்தால் அது பிரயோசனமற்றதாகும். எனவே, இந்தப்பிரச்சினைக்குத் தனியார் தொண்டர்கள், தலைவர்கள், துறைசார் நிபுணர்கள், ஆசிரியர்கள் என எல்லோரும் இணைந்து, திட்டமிட்ட அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். சுற்றாடல் பிரச்சினை இடத்துக்கிடம் மாறுபட்டிருப்பதால் - சிற்றூர் அவைமட்டம், வட்ட அவைமட்டம், பிரதேசமட்டம், முழு குடாநாடு ஆகிய மட்டங்களில் பிரச்சினைகள் எவ்வாறு இனம்காணப்படவேண்டும். இனம் காணப்பட்ட பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படவேண்டும் என்பதற்கு - ஆராய்ச்சிகளும், ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவேண்டும். ஒவ்வொரு துறைகளும் தனித்தனியாக ஆய்வு செய்யப்படவேண்டும். இந்த ஆய்வுகளையும் ஆராய்ச்சிகளையும் - பல்கலைக்கழகமும் திணைக்களங்களும் தனியார் நிறுவனங்களும் மேற்கொள்ளவேண்டும். இவை எல்லா மட்டங்களிலும் இணைக்கப்படவேண்டும். வெவ்வேறு பிரிவுளாக இயங்கிக்கொண்டிருப்பவற்றையெல்லாம் - பொதுவான ஒரு அமைப்பாக உருவாக்கவேண்டும். சகல மட்டங்களிலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதுடன், நிதி மூலத்தையும், பெறக்கூடிய வழிகளையும் மேற்கொள்ளவேண்டும். நிபுணத்துவ ஆலோசனைகளையும் மக்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

#### சுண்ணாம்புப் பாறைகள் சிதைவுறல்

மழை பெய்யும்போது காற்றிலுள்ள காபனீரொட்சைட்டு மிகுதியாக உறிஞ்சிப்படுமாயின், மழைநீர் மென்மையான காபோனிக்கமிலத்தை உருவாக்கும். இந்தக் காபோனிக்கமிலமானது நிலத்திலுள்ள கல்சியம், மக்னீசியம், இரும்பு போன்ற மூலகங்களைக் கரைக்கும் இயல்புடையது. காபோனிக்கமிலம் கலந்த மழைநீர் குடாநாட்டிலுள்ள சுண்ணாம்புப் பாறைகளூடாகச் செல்லும்போது - உடைவுகளையும் பிளவுகளையும் ஏற்படுத்தி, கற்பாறைகளை உருவாகச்செய்கிறது. இவ்வாறு பாறைகள் உருக்குலையும்போது, பறைகளூடாக நீர் வழிப் பாறைகள் ஏற்படலாம். இதனால், சேமிக்கப்பட்ட நன்னீர் படுக்கையிலுள்ள நீரானது, நீர் பாதைவழியாகக் கடலை அடையலாம் அல்லது கடல்நீர் உட்புகுந்து வரவழியேற்படலாம்.

#### இரும்பு மூலகம் கலக்கப்படல

நிலநீர் தாங்கு படுக்கையிலுள்ள இரும்பானது - நீரில் கலந்துள்ள காபோனிக்கலமத்தினால் அல்லது வேறு அமிலங்களினால் கரைக்கப்படுகின்றது. கரைக்கப்பட்ட இரும்பு மூலகமானது நீரில் கலந்து சுவை, நிறம் ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

#### வன்மையான நீர் உண்டாதல்

அமில நீரின் தாக்கத்தினால் - சுண்ணாம்புப்பாறை அல்லது மக்னீசியம் காபனேற்றில் தாக்கம் ஏற்படும்போது, அவை கல்சியம் இருகாபனேற்றாகவோ அல்லது மக்னிசியம் காபனேற்றாகவோ மாற்றமடைகின்றன. இவை நீருடன் சேர்ந்து நீரின் சுவையை அழிக்கின்றன.

(முற்றும்)

மு.கந்தசாமி (மேலாளர்)
அக்றோடெக் தகவல் மையம்.
கரவெட்டி.

# ஈராக்கில் தேர்தல் நடத்தாமல் அரசை நிறுவ அமெரிக்கா முயற்சி!



தேர்தல்கள் இல்லாது அரசு ஒன்றை, யூலை மாதம் ஈராக்கில் அமைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, அமெரிக்கா முயற்சிகள் மேற்கொண்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோபி அனானின் நேரடிப்பார்வையில் அரசை அமைக்கவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

கோபி அனான் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போது, ஐக்கிய நாடுகளின் அதிகாரிகளுக்கு ஈராக்கில் தகுந்த பாதுகாப்பளிக்கும் நிலையில், தாம் உதவமுடியுமெனத் தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதம் ஐக்கிய நாடுகளின் தலைமைக் காரியாலயம் ஈராக்கில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டபோது, அதிகாரிகள் திருப்பி அழைக்கப்பட்டு ஐக்கிய நாடுகளின் ஈராக்கிய காரியாலயம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே ஈராக்கிய ஆன்மீகத்தலைவர் அயோத்தல்லா அலி அல்-ஷிராணி தேர்தல் நேரடியாக நடத்தப்படவேண்டும் என தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, ஈராக்கியர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்றும் சென்றவாரம் நடத்தப்பட்டது.

புதிய அரசொன்றை அமைப்பதற்கு இயா முஸ்லீம்களின் ஆதரவு அவசியமானதென செய்தியாளர்கள் நீண்டகாலமாக சியா முஸ்லீம்கள் சதாம்ஹுஉசைனின் அரசால் பாதிக்கப்பட்டு வந்துள்ளார்கள். இதனால் வாக்கெடுப்பின் மூலம் உருவாகும் தேர்தல், தமது மக்கள் பலத்தை வெளிப்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

இதனால், இது தொடர்பாக பேச்சில் ஈடுபடுவதற்கு இராக்கியர்கள் அமெரிக்க நிர்வாகி போல் பிரைமர் கோபி அனானை திங்கட்கிழமை சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

# சீனாவில் சார்ஸ் நோயினாலேயே இரு நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்



குவாங்டொங் மாகாணத்தில் அண்மையில் சார்ஸ் நோய்க்கிருமிகளின் தாக்கத்திற்குள்ளானவர்கள் என சந்தேகிக்கப்பட்ட இருவரும் அந்நோயினால்தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளதாக, சிங்குவா செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட உலக சுகாதார ஸ்தாபனம் புனுகுப் பூனைகளே இந்நோயின் காவிகளாக செயற்பட்டு வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மேலும், இந்நோயினால் பாதிக்கப்பட்ட 20 வயதுடைய பெண் காவலாளி உடல் நிலை சீரடைந்த பின் வைத்திய சாலையில் இருந்து வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்து 35 வயதுடைய வர்த்தகர் ஒருவரின் நோயிலும் மாற்றம் கண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை இந்நோயினால் 800 நோயாளிகள் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# சூடானின் அகதி முகாமிலிருந்த 10,000 பேர் அங்கிருந்து வெளியேற்றம்

சூடானின் தென்பகுதியான டாக்பேர் பிரதேசத்தில் அமைந்துள்ள அகதிகள் முகாமொன்றிலிருந்து 10,000 இற்கும் மேற்பட்ட அகதிகள் வெளியேறி காட்டுக்குள் தஞ்சமடைந்துள்ளதாக, அம்முகாமை நிர்வகித்து வந்த பிரெஞ்சின் மருத்துவ அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

இம்முகாம் அமைந்த டாக்பேர் பிரதேசத்தில் அங்கு வாழ்ந்த ஆபிரிக்கன் மொழியை பேசும் கறுப்பு இன மக்களுக்கு எதிராக, அராபிய மொழி பேசும் தீவிரவாதக் குழுக்கள் இன அழிப்பொன்றை மேற்கொண்டு வந்தது. தமது இன மக்களைக் காப்



பாற்றுவதற்கு இரு போராளிக் குழுக்கள் சென்ற ஆண்டு அரசு சார்ந்த குழுக்களுக்கு எதிராக போர் நடாத்தி வந்துள்ளன. அரசுடன் நடாத்திய பேச்சுக்கள் முறிவடைந்த நிலையில் போர் தீவிரமடைந்ததால் 10,000 ற்கும் மேற்பட்ட மக்கள் காடுகளுக்குள் தஞ்சமடைந்துள்ளதாக, பிரெஞ்சு உதவி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இதுவரை இந்நகரத்தில் இருந்து 6,00,000 இற்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். இம்மக்களின் உணவு, சுகாதாரம், ஆகிய தேவைகளுக்காகவே பிரெஞ்சின் மருத்துவ அமைப்பு முகாம்களை நிறுவியிருந்தது. தற்போது இம்முகாம்களை மூடிவிடுமாறு சூடான் அரசாங்கம் உதவி அமைப்புக்களை கேட்டுள்ளது.

# செங்கடலில் விழுந்த விமானத்தின் கறுப்பு பெட்டி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது



ஜனவரி 3 ஆம் திகதி எகிப்தில் உள்ள 'சம் அல் செய்க்' விமான நிலையத்தில் இருந்து 134 பிரெஞ் உல்லாசப் பிரயாணிகளுடனும், 13 எகிப்திய பிரயாணிகளுடனும் சென்ற விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் செங்கடலில் விழுந்து நொருங்கிய விமானத்தின் 'கறுபபுப் பெட்டி' பிரெஞ்சு கடற்படையிரனால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 2600 அடி ஆழத்தில் விமானத்தின் சிதைந்த பாகங்கள் விழுந்துள்ளதால் தேடுதல் பணியில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இதனால் 'ரோபோ' பொருத்திய நீர்மூழ்கியின் உதவியுடன் இக்கப்பலில் கறுப்புப்பெட்டி வெளியே எடுத்து வரப்பட்டுள்ளது.

இக்கறுப்புப்பெட்டியின் உதவியுடன் 148 பிரயாணிகளின் மரணத்திற்கு கரணமான விமானத்திற்கு என்ன நடந்ததென அறியமுடியும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக்கில் நடந்த தாக்குதலில் 3 அமெரிக்கப் படையினர் பலி!

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் வடபகுதியான தஜி என்ற பிரதேசத்தில் ரோந்துசென்ற அமெரிக்கப் படையினர் மீது நேற்று நடாத்தப்பட்ட தாக்குதலில், 3 அமெரிக்கப் படையினரும், இரு ஈராக்கியர்களும் கொல்லப்பட்டனர்.

தெருவோரத்தில் நிகழ்ந்த குண்டுத் தாக்குதலில் வாகனம் தீப்பற்றி எரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப் படையினர் ஈராக்கிய பாதுகாப்பு அதிகாரிகளுடன பாதையோரத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்களைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தவேளையில் இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.



இந்தக் குண்டுவெடிப்பின் பின் குண்டுகள் தயாரிக்கும் வெடிபொருட்களுடன் கூடிய வண்டியொன்றைக் கைப்பற்றியதாகவும் படையினர் தெரிவித்தனர்.

சுனி முஸ்லிம்கள் வாழும் பிரதேசத்தில் அமெரிக்கப் படையினருக்கு பலத்த எதிர்ப்பு தொடர்ந்தும் காணப்படுகிறது. இதுவரை உயிரிழந்த அமெரிக்கப் படையினரின் எண்ணிக்கை 500 ஆக உயர்ந்துள்ளது.

# ஹபிள் விண்கலத்தை சேவையிலிருந்து நீக்குவதற்கு நாஸா தீர்மானம்!

வான்வெளியில் தற்போது சுற்றி வரும் "ஹீபிள்" எனப்படும் தொலை நோக்கிக்கருவி பொருத்தப்பட்ட கலத்தை, அதன் பணியிலிருந்து நிறுத்திவிடுவதற்கு "நாஸா" தீர்மானித்துள்ளது. 2010 ஆம் ஆண்டு வரை செயற்படக்கூடியதாக தொலை நோக்கி வடிவமைக்கப்படிருந்தது

1990 ஆம் ஆண்டு இத்தொலை நோக்கிக் கருவி வான் வெளியில் செயறபட ஆரம்பித்ததிலிருந்து வானியல் ஆய்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது.

இத்தொலைநோக்கியின் பல முக்கிய பாகங்கள் பழுதடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொலம்பிய விண்கலம் வானில் வெடித்துச் சிதறியதிலிருந்து இந்த தொலைநோக்கியின் பாகங்கள் திருத்தும் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இத்தொலைநோக்கிக் கருவி அனுப்பிய படங்களின் மூலம் பூமி



யின் வயது 13 பில்லியன் ஆண்டிற்கு மேற்பட்டதென விஞ்ஞானிகளால் அறியமுடிந்தது.

## உலக நோக்கு

# நாடாளுமன்றத் தேர்தலை ஒரே நாளில் நடத்த முடியாது

## இந்திய தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

நாடாளுமன்றத்திற்கு நாடு முழுவதும் ஒரே நாளில் தேர்தல் நடத்தமுடியாது. அதற்கான வாய்ப்பே இல்லை எனத் தேர்தல் ஆணையாளர் கிஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பிறகு தேர்தல் நடத்துவதற்கு தேர்தல் கமிஷனுக்கு 45 நாட்கள் தேவை. அதே நேரத்தில் பல்வேறு மாநிலங்களில் உள்ள உள்ளூர் நிலவரங்களையும் தேர்தல் கமிஷன் கருத்தில் கொள்ளவேண்டி இருக்கிறது. இவற்றைப் பரிசீலித்த பிறகே தேர்தல் திகதிபற்றி முடிவுஎடுக்கமுடியும். நாடு முழுவதும் இந்தமுறை இலத்திரனியல் இயந்திரம் மூலம ஓட்டுப்பதிவு நடைபெறும். ஓட்டுப்பதிவு இயந்திரங்களை பாதுகாத்து வைப்பது தொடர்பாக தேர்தல் அதிகாரிகளுக்கு கமிஷன் விரிவான வழிமுறைத் தெரிவிக்கும்.

நாடாளுமன்றம் பெப்ரவரி 5 அல்லது 6 ஆம் திகதி கலைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திகதிகளில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் தேர்தல் கமிஷனுக்கு தேவைப்படும் 45 நாட்களுக்கு அதிகமாக கால அவகாசம் கிடைக்கிறது. மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில் கடைசிக்கட்டமாக ஏப்ரல் 2 ஆவது வாரத்தில் தேர்தல் நடக்க வாய்ப்பு உள்ளது.

# கதிரியக்கக் கருவியை இயக்கமுற்பட்ட அமெரிக்கப் பிரஜை தடுத்துவைப்பு!

சிக்காக்கோ விமான நிலையத்தில் கதிரியக்கக் கருவி ஒன்றினை செயற்படுத்த முற்பட்டதன் மூலம், பேரழிவினை உண்டாக்குவதற்கு முற்பட்டார் என அமெரிக்க அரசினால் குற்றம் சுமத்தப்பட்ட ஜோன் படிலா என்ற அமெரிக்கப் பிரஜை தென்கரோலினாவிலுள்ள கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். இவரின் குற்றங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட அமெரிக்க உயர்நீதிமன்றம், அமெரிக்கப் பிரஜை ஒருவர் அமெரிக்க மண்ணில் கைது செய்யப்பட்டிருந்தார் என தெரிவித்து இவரை விடுதலை செய்திருந்தது.

ஆனால், அமெரிக்க நீதி அமைசசு இவரை விடுதலைசெய்ய வேண்டாம் என கேட்டுள்ளது. இதனிடையே புஷ் நிர்வாகம் எதிரியுடன் இணைந்து அமெரிக்காவுக்கு எதிராக போராடிய அமெரிக்கர் என தெரிவித்து, இவர் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

இரண்டாவது உலகப் போரின் பின்னர் அமெரிக்க ஜனாதிபதியின் கட்டளையின் கீழ் கைதுசெய்யப்பட்ட முதலாவது அமெரிக்கப் பிரஜை இவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்கள் சமாதான அரங்கு யாழிலும் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
மக்கள் சமாதான அரங்கு அமைப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று, டியோகு வீதி, கியுடெக் நிறுவனத்தில் நேற்று இடம்பெற்றது.

மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதி பரமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், மதத்தலைவர்கள், பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

கொழும்பு, கண்டி ஆகிய மாவட்டங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த மக்கள் சமாதான அரங்கினைப் போன்று, யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்து வைப்பதே இதன் நோக்கமாகும்.

இந்தச் சமாதான அரங்கில் முக்கிய மூன்று நோக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தல், மாகாண சபைகளில் இனப் பிரச்சினை தொடர்பான விடயங்களை எடுத்துரைத்தல், விடுதலைப் புலிகளின் திட்டவரைபை ஏற்றுக் கொள்ளச் செய்தல் போன்ற கொள்கைகளின் அடிப்படையில் இந்த அமைப்பு செயற்படவுள்ளது.

இந்த அமைப்பில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலில், தற்காலிக உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இதன் செயற்பாடுகள் நிரந்தரமான குழு ஒன்றினை அமைக்கும்வரை இடம்பெறும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி மீண்டும் இந்த அமைப்பு கூடிச் சமாதான முன்னெடுப்புக்களை வலியுறுத்தும் செயற்பாடுகளை ஆராயவுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை நேரடியாக வலியுறுத்தும் வகையில் இந்தச் சமாதான அரங்கு செயற்படும் என்றும் நேற்றைய கூட்டத்தில் ஒழுங்கமைப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

# அதிகாரம் மீதான ஆசையுடனேயே ஜனாதிபதி சந்திரிகா செயற்படுகிறார்

## அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)
அதிகாரம் மீதுள்ள விருப்புகாரணமாகவே மூன்று அமைச்சுக்களையும் ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்றதாக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றையதினம் களுத்துறை நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி அதிகாரம் மீது விருப்புக்கொண்டுள்ளார். அன்று மணி இராசகுளத்தில்உள்ள புலிகள் முகாமை அகற்றவேண்டும் எனக் கூறினார். விடுதலைப்புலிகள் பலமடைந்து வருவதாக கூறினார். மணி இராசகுள முகாமை பத்து நாட்களுக்குள் அழித்துவிடுமாறு பாதுகாப்பு அமைச்சர் மாரப்பனவுக்கு எழுத்து மூலம் அறிவித்தார்.

இப்போது நாட்டின் அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியின் கையில் உள்ளது. பாதுகாப்பு அமைச்சராகவும் அவரே திகழ்கின்றார். ஆனாலும், மணி இராசகுளம் முகாம் தொடர்பாக அவர் என்ன செய்தார்.

அந்த முகாம் இன்றும் இருக்கின்றது. ஜனாதிபதியின் செயற்பாடுகள் அனைத்தும் வெறும் பொய், பித்தலாட்டம்.

நாட்டின் மீது உள்ள பற்றுக்காரணமாக மூன்று அமைச்சுகளை பொறுப் பேற்கவில்லை. அதிகாரம் மீதுள்ள ஆசை காரணமாகவே இவ்வாறு செயற்படுகின்றார் எனவும் தெரிவித்தார்.

# உலமா சபை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உலமாசபை அஹதிய்யா ஆரம்ப விழா இன்று யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இஸ்லாமியா வாழ்வின் மகோன்னத தன்மையை சிறார்களின் உள்ளங்களில் ஆழப்பதித்து இஸ்லாமிய அறிவை வழங்கும் நன்நோக்குடன் அஹதிய்யா கல்விநிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் உலமா சபைத் தலைவரும் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் இணைப்பாளரும், மக்கள் பணிமனை தலைவருமான மௌலவி ஏ.எல். சுப்யான் கலந்துகொள்ளவுள்ளார்.

பி.ப. 4.30 மணிக்கு அஸர் தொழுகையைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்படவுள்ளது என யாழ். இஸ்லாமிய உலமாசபை செயலாளர் தெரிவித்தார்.

# கேணல் கிட்டு நினைவு...

தொடர்ந்து அகவணக்கம் நடைபெற்றது. அதன் பின்னர் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இரண்டு மேடைகளில் உள்ளரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந் நிகழ்வின் வரவேற்புரையை போராளி இளம்பரிதி நிகழ்த்தினார். அதனைத் தொடர்நது மோட்டார், பீரங்கிப் படையணிகளின் உருவாக்க வரலாற்றுச் சுருக்கத்தை லெப். கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி நிர்வாகப் பொறுப்பாளர் அமுதன் தனது உரையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து படையணிப் போராளிகளினதும், மகளிர் கலை, பண்பாட்டுக் கழகக் கலைஞர்களினதும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. போராளிகளின் கலை நிகழ்வுகள் மோட்டார் படையணிகளின் கடந்த கால அனுபவங்களையும், இவ்வளர்ச்சிக்கு வித்திட்ட மாவீரர்களின் வரலாறுகளையும் எடுத்துக்கூறின.

வங்கக் கடலிலே காவியமான இப்பத்து வேங்கைகளின் நினைவு தின நிகழ்வில் கேணல் கிட்டு பீரங்கிப் படையணியும், லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியும் நிதர்சன நிறுவனத்தின் அனுசரணையுடன் உருவாக்கிய "வரும் பகை திரும்பும்" எனும் இசைத்தட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இநத இசைத்தட்டை லெப். கேணல் குட்டிசிறி மோட்டார் படையணித் தளபதி கேணல் பானு வெளியிட்டு வைக்க தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து இந்த இசைத்தட்டு உருவாக்கத்தில் பங்கெடுத்த சகல கலைஞர்களையும் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கௌரவித்தார். உள்ளரங்க நிகழ்வுகளில் 'சதியை வென்ற சாவுகள்' என்ற கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் இறுதிக் கணப்பொழுதுகளைச் சித்திரிக்கும் நாட்டிய நாடகமும் நடைபெற்றது.

இதனை உருவாக்கி நெறிப்படுத்திய புதுவை அன்பனை தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சிறப்புப் பரிசு வழங்கிக் கௌரவித்தார்.

புதுவை அன்பன் பல்வேறு தெருவெளி நாடகங்களையும், மேடை நாடகங்களையும் உருவாக்கி நெறிப்படுத்தியவர் என்பதோடு நீண்ட காலமாக தாயக நேசிப்போடு கலைப் பணி ஆற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி மகளிர் பிரிவுத் தளபதி பவநிதியின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் யாவும் நிறைவடைந்தன. இந்நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதியின் பதவி...

1994 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் முதற்தடவையாக ஜனாதிபதியாகத் தெரிவான சந்திரிகா குமாரதுங்க, தனது பதவிக்காலம் முடிவடைய முன்னரே 1999 ஆம் ஆண்டு தேர்தலை நடத்தி உடனடியாக இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார்.

பின்னர், அவர் 2000 ஆம் ஆண்டு இரகசியமான முறையில், மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், சத்தியப்பிரமாணத்தைச் செய்துவைக்க வேண்டிய பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்குத் தெரியாமலும், பொது ஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்குத் தெரியாமலும் எவ்வாறு பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தினையே சர்வதேச சமூகத்திடம் கொண்டுசெல்ல ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருக்கிறது. (01)

# 4 அமைச்சுகள், 4 பிரதி...

ஆனால், உடன்பாடு கைச்சாத்திடப்படும் தினமான எதிர்வரும் செவ்வாயன்று காலை அவர் நாடு திரும்புவார் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஜே.வி.பியுடன் இணைந்து அமைக்கக்கூடிய அரசாங்கத்தில், அந்தக்கட்சிக்கு விவசாய அமைச்சு மற்றும் கடற தொழில் அமைச்சு உள்ளிட்ட நான்கு அமைச்சுக்களையும், நான்கு பிரதியமைச்சர் பதவிகளையும் விட்டுக் கொடுக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணங்கியுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய, அரசாங்கத்தை வீழ்த்தும் நோக்கில் - ஒன்பது மாத காலப் பேச்சுக்களின் மூலம் ஜே.வி.பி.யும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டணி உடன்பாட்டில் கைச்சாத்திடவுள்ளன.

இதன்பின்னர், எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்தில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில், வைத்து நாடாளுமன்றம் தொடர்பான விசேட அறிவிப்பு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா விடுக்கக்கூடும் என்றும், கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (01)

# பொங்குதமிழ் 3 ஆம்...

பல்கலைக்கழக நூலகத்துக்கு அருகாமையில் உள்ள பெயர்ப்பலகைக்கு முன்னால் அமைக்கப்பட்ட சிறப்புத்தீபத்தினை தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் கண்ணன் ஏற்றிவைத்தார்.

பின்னர் யாழ்.கைலாசபதி அரங்கத்தில் சிறப்புரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

யாழ்.பல்கலைக்கழக நாடகத் துறையினைச் சேர்ந்த சிதம்பரநாதன், துணைவேந்தர் மோகனதாஸ், தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, அரசியற்துறை விரிவுரையாளர் கணேசலிங்கம், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதி பரமநாதன், சர்வதேச மாணவர் பேரவையின் தலைவர் கஜேந்திரன் ஆகியோர் பொங்கு தமிழ் உரைகளையாற்றினர்.

பொங்குதமிழ் உரைகளைத் தொடர்ந்து தாயக இன்னிசை கானங்கள் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ,பொது மக்கள் ,மாணவர்கள், விரிவுரையாளர்கள், தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

போராட்டம் கல்விக்கு அவசியம், கல்வி போராட்டத்திற்கு காப்பரண் என்ற வாசகத்தைத் தாங்கிய தலைவர் பிரபாகரனின் உருவப் படம் கைலாசபதி கலையரங்கின் மேடையில் வைக்கப்பட்டிருந்தமை சிறப்பான அம்சமாக காணப்பட்டது.

# இலங்கை....

வாறு என்பது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிநிலை, அபிவிருத்திப் பணிகள், எதிர்கால திட்டங்கள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும்.

இந்தக்கூட்டத்திற்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளோ, இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளோ அழைக்கப்படவில்லை என்பதுடன் இந்தியாவிற்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் றிச்சட் ஆர்மிரேஜினால், இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்தின் பின்னர், அவரால் இந்த மாநாடு கூட்டப்படுவது குறிப்பிடத்தக்கது.


M.A, M.Com

(காமராஜர் பல்கலைக்கழகம் மதுரை)



- மேற்குறிப்பிட்ட பட்ட பாட நெறிகளுக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்களாவர்.
- விண்ணப்ப முடிவு திகதி :- 31.01.2004
- விரிவுரைகள் ஆரம்பம் :- 01.02.2004 (ஒரு மணி)
- கீழ்க்காணும் பாடங்களில் ஒன்றை மட்டுமே தெரிவுசெய்யலாம்.

1) தமிழ் 2) சமய தத்துவம் 3) ஆங்கில இலக்கியம்
4) பொருளியல் 5) அரசியல் 6) சமூகவியல்
7) பொது நிர்வாகம்

குறிப்பு- இவற்றிற்குரிய பரீட்சைகள் இலங்கையில் நடைபெறும். M.Com (ஆங்கிலம், தமிழ்) இரு மொழிகளிலும் ஆரம்பமாகின்றன.

யாழ்.இணைப்பாளர்

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

(சி-2156)


# மரண அறிவித்தல்

## ஏகாம்பரம் ரவிச்சந்திரகுமார்

(மிருசுவில்)

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட ஏகாம்பரநாதன் ரவிச்சந்திரகுமார் 16-01-2004 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் தயாநிதியின் அன்புக் கணவரும், ராகவியின் பாசமிகு தந்தையும், திரு.திருமதி ஏகாம்பரநாதனின் சிரேஷ்ட புதல்வனும், காலம் சென்றவர்களான இராசரத்தினம் இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், பாலச்சந்திரகுமார் (வீமன் - போராளி), புகச்சந்திரகுமார் (கனடா), சிவச்சந்திரன் ஆகியோரது அன்புச் சகோதரனும் பவானி (சுவிஸ்), அருள் (சுவிஸ்), கண்ணன் (சுவிஸ்), மோகன் (கனடா), நர்மதா (பளை) ஆகியோரது மைத்துனரும் அவிசாந், ஹரிசாந், விதுசாந், ஆத்மிகா ஆகியோரது பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மிருசுவிலில் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்

தகவல்
பெற்றோர்

(596)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.